# வவனியாவில் கொள்ளை: ஆயுதந்தாங்கிய கொள்ளைக்கோஷ்டி எங்கே?


Registered as a News pape in Ceylon விலை சதம் 15

ஈழநாடு சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

# ஈழநாடு

EELANADU

மலர் 11
இதழ்:56
தபால்பெட்டி எண்: 49
போன்: 389
National Tamil Daily
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

யாழ்ப்பாணம் பங்குனி 25 முஹறம் 19 திங்கட்கிழமை 7-4-69]


## பொலிஸ் காஷ்டி கரவெட்டிக்கு விரைகிறது

வவனியா, திங்,

ஆயுதந்தாங்கிய கொள்ளைக்கோஷ்டியொன்று இரவு வேளையில் வீடுஒன்றில் புகுந்து, ரொககப்பணத்தையும் நகைகளையும் களவாடிச் சென்ற சம்பவமொன்று வவனியாவை அடுத்துள்ள புளியங்குளம் என்னுமிடத்தில் நடைபெற்றுள்ளது.

2365 ரூபா ரொக்கப்பணமும், நகைகளும் களவாடப்பட்டுள்ளதாக பொலிசில் புகார் செய்யப்பட்டது. கரவெட்டியைச் சேர்ந்தசிலரே இந்தப் பயங்கர கொள்ளையில் ஈடுபட்டதாகப் பொலிசார் கருதுகின்றனர். இது சம்பந்தமாகச் சிலரைக் கைதுசெய்வதற்காக வவனியா பொலீஸ் இன்ஸ்பெக்டர் திரு. இராமநாதன் தலைமையிலான பொலிஸ் கோஷ்டியொன்று கரவெட்டிக்கு விரைகிறது.

அண்மைக்காலத்தில் இப்படியான கொள்ளைச் சம்பவங்கள் வவனியாவில் அடிக்கடி நடைபெறுவதாகவும், கொள்ளைகளுக்கு ஆயுதங்கள் உபயோகிக்கப்பட்டுவருவதாகவும் பொலிசார் தெரிவித்தனர் திட்டமிடப்பட்டு செய்யப்படுவதாகக் கூறப்படும் இக்கொள்ளைக் கோஷ்டியைப் பிடிப்பதில் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

## மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன்

# ஆலய அசம்பாவிதங்களுக்கு அரசாங்க தரப்பே காரணமாம்

### எஸ். டி. பண்டாரநாயகா குற்றச்சாட்டு

நல்லூர், திங்கள்

**பன்றித்தலைச்சி அம்மன் கோவிலில் அண்மையில் நடைபெற்ற அசம்பாவிதங்கள் எல்லாவற்றுக்கும் தென்மராட்சி காரியாதிகாரியும், பொலிசாரும், அரசாங்க தரப்பினருமே காரணமென நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்திருந்த சீனச்சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கம்பகா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயகா தெரிவித்தார்.**

நேற்றுக்காலை வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கத்தை நேரில் சந்தித்த திரு. எஸ். டி. பண்டாரநாயகா இச்சம்பவம் சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்திய பின்னரே இதைத் தெரிவித்தார்.

கடந்த 10- திகதி கோவில் பரிபாலசபையாருக்கும், அரசாங்க அதிகாரிகளுக்குமிடையே நடைபெற்ற சமரச மாநாட்டில், பொங்கல் பாவனைக்கு தண்ணீர் வழங்கும் பொறுப்பு தென்

அவர் மேலும் கூறியதாவது:-

தண்ணீர் கொடுக்கும் பொறுப்பை ஏற்ற அரசாங்க தரப்பினர் அப்படிக் கொடுத்திருந்தால் கேணியைச்சுற்றி அடைக்கப்பட்டிருந்த கம்பிவேலிகளை சிறுபான்மை மக்களோ அல்லது எவரோ வெட்டியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்க முடியாது. ஆதலால் அங்கு ஏற்பட்ட சம்பவங்கள் எல்லாவற்றுக்கும் அரசாங்க சார்பினரே பொறுப்பானவர்

கள் கோயில் கிணற்றில் தண்ணீர் அள்ளியபடியினால் தான் இரண்டாம் கிழமை கோயில் பரிபாலனசபையார் கிணற்றினுள் உமியையும், நஞ்சையும் போட்டதுடன் 3-ம் கிழமை கம்பி வேலியையும் போட்டிருக்கிறார்கள்.

இன்றுகாலை யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குச் சென்று, இச்சம்பவம் சம்பந்தமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள் சுப்பையா, சின்னையா ஆகிய இருவரை



கோண்டாவில் சாயத் தொழிற்சாலை யொன்றைத் திறந்து வைத்து உடுவில் பிரதிநிதி திரு. வி. தர்மலிங்

## வாகனங்களை நிறுத்தி பொலிஸார் சோதனை

### முள்வேலிகள் பலப்படுத்தப்பட்டன

யாழ்ப்பாணம், திங்.

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன்கோவில் மூன்று வாசல்களையும், ஆலய பரிபாலனசபையினர் நேற்றுக்காலை முட்கம்பிகளால் அடைத்தனர். கோவிலைச் சுற்றியுள்ள மற்றும் முட்கம்பி வேலிகளும் நேற்றுப் பலப்படுத்தப்பட்டுள்ளன.

நேற்றுக்காலைமுதல் கோவிலுக்கு அருகிலுள்ள ரோட்டினூல வந்த வாகனங்களை பொலிசார் மறித்துச் சோதனை செய்தனர். பஸ்கள் மட்டும் சோதனையிடப்படவில்லை. பஸ்ஸில் வந்து கோவிலடியில் இறங்குவோரும் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

நேற்று நண்பகல முதல மட்டுவில் பகுதியில் பொலிஸார் அதிகரிக்கப்பட்டுள்ளனர். பொலிஸ் ஜீப் வண்டிகளில் பொலிஸார் மட்டுவில் பகுதிகளில் ரோந்து சுற்றிவருகின்றனர்.

கோவிலடிக்குச் செல்லும் சகல வாகனங்களும், பொலிஸாரால் சோதனையிடப்படுமென்றும், சந்தேகத்திற்கிடமானவர்கள் கைதுசெய்யப்படுவார்களென்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுககாலை பொலிஸ் கோஷ்டியொன்று, மட்டுவில் பகுதியில் சில வீடுகளையும் ஒரு கடையையும் சோதனை செய்ததாக பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

கைக்குண்டு வீச்சு சம்பவத்தையொட்டி பொலிஸாரால் தேடப்பட்டு வரும் கதிரன் செல்லக்கிளி என்ற இளம்பெண் நேற்று முன்தினமிரவு மட்டுவிலுக்கு வந்திருப்பதாகவும் மட்டுவில் மகாவித்தியாலயத்திற்கு அருகில் உள்ள ஒரு வீட்டில் தங்கியிருப்ப

தெரியவருகிறது.

செல்லக்கிளியை எங்கு கண்டாலும் கைது செய்யும்படி சாவகச்சேரிப் பொலிஸ் இன்ஸ்பெக்டா திரு. கே. துரைசிங்கம் பொலிசாருக்கு உத்தரவிட்டிருப்பதாக அறியப்படுகிறது.

நேற்று முன்தினம் கம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்காவிடம் சாவகச்சேரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கே. துரைசிங்கம் கடந்த திங்கட்கிழமை நடந்த சம்பவங்களை விளக்கிக் கூறினர்.

பொங்கலுக்கு தண்ணீர் வழங்கும் பொறுப்பை காரியாதிகாரி தலைமையில் உள்ள குழு ஏற்றதாகவும் அக்குழு ஏன் தண்ணீர் வழங்கவில்லையென்றும் திரு பண்டாரநாயக்கா கேட்ட பொழுது வழக்கம்போல் பொங்கல் உற்சவம் நடைபெறாததால் தண்ணீர் வழங்கப்படவில்லையென திரு. துரைசிங்கம் தெரிவித்தார்.

அரசாங்க அதிபர் கூட்டிய மகாநாட்டில் நீதிமன்றத் தீர்ப்பு வரும்வரை கோவில் மூடப்பட்டு பூசைகளும் நிறுத்தப்பட வேண்டுமென திரு. எஸ். என். ரி. நாகரத்தினம் கோரியதாகவும், அவரின் கோரிக்கையை கோவில் பரிபாலன குழுவினர் நிறைவேற்றியதாகவும் கம்பஹா எம். பி.யிடம் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## "உய்விக்க வந்த உத்தமர்"

வெள்ளவத்தை, சனி

"உலகை உய்விச்க வந்த உத்தமர்கள் வரிசையில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரும் ஒருவர். அவர் மானிடருக்குப் புதிய வாழ்க்கை நெறியைக் காட்டினார். இவரின் உபதேசங்கள் சாதாரண பொதுமக்களும் புரிந்துகொள்ளக் கூடியவை. உபகதைகள் சொல்லி உயர் தத்துவங்களை விளங்கப்படுத்தினார்.

இவ்வாறு திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெற்ற ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் ஜயந்திவிழாவில் பேசுகையில் கூறினார்.

நீதியரசர் திரு. எஸ். ஆர். விஜயதிலகா தலைமை வகித்தார். வழக்கறிஞர் திரு. எஸ். ஹரிஹரஐயர் பேசுகையில், "கிராமத்திலேயே தமது வாழ்வைத் தொடக்கிய பரமஹம்சர் இளமையிலேயே ஆத்மீகத் தாகம் நிரம்பியவராகக் காணப்பட்டார். அவர் உணர்வெல்லாம் ஆத்மீகத்தையே நாடியது. இவர் ஒரு சங்கீதப் பிரியர். தியானசிந்தையில் தம்மைத் திடப்படுத்திக்கொண்டவர்" என்றார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணசபாவின் பக்திக்கீதமும் ஸ்ரீ சாரதா சங்கீத சமிதியின் பஜனையும் இடம்பெற்றன.

## 'சியவச'வை எதிர்த்து சுப்ரீம்கோர்ட்டில் வழக்கு

### காங்கேசன்துறை ப ச, அங்கத்தவர் யோசனை

காங்கேசன்துறை, சனி

'சியவச' டிக்கட்டுகளை

கூடாது எனக் கல்வி அமைச்சு சுற்றுநிருபம்மூலம் உத்தியோகத்தர்களுக்கு கட்டளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோண்டாவில் சாயத் தொழிற்சாலை யொன்றைத் திறந்து வைத்து உடுவில் பிரதிநிதி திரு. வி. தர்மலிங்கம் உரை நிகழ்த்தினார்.

## தொழிலாளர் பிரச்னையை நேரில் விசாரிக்க தடை

### தொழில் அமைச்சர் உத்தரவு

கோட்டை, ஞாயிறு

தொழிலாளிகள் முதலாளிகள் மத்தியில் ஏற்படும் பிணக்குகளை அந்தந்த இடங்களுக்குச்சென்று விசாரணை செய்வதை நிறுத்துமாறு தொழில் அதிகாரிகளுக்குத் தொழிலமைச்சர் ஜனாப் எம். எச். முகமத் உத்தரவிட்டுள்ளார். இதுபற்றி தொழில் இலாகாவுக்கும் தொழில் ஆணையாளருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் முதலாளிக்கும் தொழிலாளிக்குமிடையே ஏற்படும் தகராறுகளை விசாரணைசெய்வதில் பாரபட்சம் காட்டப்படுவதாகச் செய்து கொண்ட புகாரைத் தொடர்ந்தே இவ்வித உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

தொழில் அதிகாரிகளுக்கு ஒரு தொழிலாளி முறைப்பாடு செய்யும்பட்சத்தில் அந்தத் தொழிலாளியையும் அவர் சம்பந்தப்பட்ட முதலாளியையும் தொழில் இலாகா விசாரணைசெய்ய ஆஜர் செய்ய வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

தொழிலமைச்சர் அனுப்பியுள்ள சுற்றுநிருபத்தில், முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்குமிடையில் நல்ல ஒற்றுமை நிலவவேண்டும் என்றும், முதலாளிகளால் தொழிலாளர் நேர்மையாக நடத்தப்படவேண்டும் என்றும் இவைகளிலேயே தாம் கூடிய கவனம் செலுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மதுராந்தகம் ஏரியை பிரதமர் இந்திரா பார்ப்பார்

சென்னை, ஏப்ரல் 6

பாரதப் பிரதம மந்திரி தமிழ்நாட்டில் வரட்சியால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடுவதற்காக இம்மாதம் 17ந் திகதி தமிழ்நாட்டுக்கு வரும்போது செங்கல்பட்டு பகுதிகளுக்கு முக்கியமாக விஜயஞ்செய்வார்

அன்று காலையில் பிரதமர் திருமதி இந்திராகாந்தி மதுராந்தகம் ஏரியைப் பார்வையிடுவார். செங்கல்பட்டு மக்களால் பெரிய அளவில் வரவேற்பு ஒன்று பிரதமருக்கு அளிக்கப்படும்.

செய்யாற்றுப் பகுதிக்கும், வட ஆற்காடு மாவட்டத்துக்கும் பிரதமர் திருமதி இந்திரா காந்தி விஜயஞ் செய்வார்.

## ம. பொ. சி. இன்று வருகிறார்

### 3 நாள் நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளுவார்

யாழ்ப்பாணம், திங்.

தமிழரசுக் கழகத் தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானகிராமணியார் உடுவிலில் நடைபெறவிருக்கும் தமிழரசுக் கட்சி 11வது மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக இன்று விமான மூலம் யாழ்ப்பாணம் வந்தடைவார் என தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

மகாநாட்டில் கலந்து கொள்ளும் திரு. ம. பொ. சி 3 நாள் நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டு சிறப்புச்சொற்பொழிவாற்றுவார். தமிழரசு மகாநாடு இன்று உடுவிலில் அமைந்த விசேஷ அரங்கில் குதூகலமாக ஆரம்பமாகிறது.

---

இதைத் தெரிவித்தார்.

கடந்த 10- திகதி கோவில் பரிபாலசபையாருக்கும், அரசாங்க அதிகாரிகளுக்குமிடையே நடைபெற்ற சமரச மாநாட்டில், பொங்கல் பாவனைக்கு தண்ணீர் வழங்கும் பொறுப்பு தென்மராட்சி காரியாதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அப்படி தண்ணீர் கொடுபடவில்லை என்று அவர் கூறினார்.

டிருந்த கம்பிவேலிகளை சிறுபான்மை மக்களோ அல்லது எவரோ வெட்டியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்க முடியாது. ஆதலால் அங்குஏற்பட்ட சம்பவங்கள் எல்லாவற்றுக்கும் அரசாங்க சார்பினரே பொறுப்பானவர்கள்.

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில் முதல் கிழமை பொங்கல் நடைபெற்றபோது, ஹரிஜனர்

வேலியையும் போட்டிருக்கிறார்கள்.

இன்றுகாலை யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குச் சென்று, இச்சம்பவம் சம்பந்தமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள் சுப்பையா, சின்னையா ஆகிய இருவரையும் அவர் பார்த்தார். யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குச் சென்று காயப்பட்டோருக்கும் ஆறுதல் கூறினார்.

ரால் தேடப்பட்டு வரும மகிரன் செல்லக்கிளி என்ற இளம்பெண் நேற்று முன்தினமிரவு மட்டுவிலுக்கு வந்திருப்பதாகவும் மட்டுவில் மகாவித்தியாலயத்திற்கு அருகில் உள்ள ஒரு வீட்டில் தங்கியிருப்பதாகவும் பொலிசாருக்குத் தகவல் கிடைத்திருப்பதாக

## குழப்பம் செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுப்பேன்

### பொலிஸ் அதிபர் எச்சரிக்கை

நல்லூர், திங்கள்

ஆலயப் பிரவேசம் சம்பந்தமான நடவடிக்கைகளில் குழப்பம் விளைவிக்காமல் பார்த்துக்கொள்ளும்படி அவரது ஆதரவாளர்களிடம் தெரிவிக்குமாறு வடபகுதிப் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் கம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்காவிடம் கேட்டுக்கொண்டார். சட்டத்தை மீறும் நடவடிக்கைகளில் எவராவது ஈடுபட்டால் அவர்கள்மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் பொலிஸ் அதிபர் தெரிவித்தார்.

கடந்த 31ந் திகதி மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலில் நடைபெற்ற கைக்குண்டு வீச்சு, பொலிஸ் தடியடி, குண்டாந்தடிப் பிரயோகம் சம்பந்தமாகப் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் கூறுகையில் ஆலயத்தில் குழப்பம் ஏற்பட்டபடியினால் அமைதியை நிலைநாட்டப் பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டதாகத் தெரிவித்தார். 3 குண்டுகள் வெடித்ததைத் தொடர்ந்து பக்தர்களுக்கு இடையூறு ஏற்படாமல் பாதுகாப்பதற்காகக் கண்ணீர்ப்புகைப் பிரயோகஞ் செய்து குண்டாந்தடிப் பிரயோகத்தில் இறங்கவேண்டிய நிலை பொலிஸாருக்கு ஏற்பட்டதாகவும், கோயிலில் அமைதியைப் பாதுகாப்பதற்காகவே இவ்விதம் நடந்துகொண்டதாகவும் மேலும் அவர் தெரிவித்தார்.

## 'இன்றும் ஆலயபிரவேச முயற்சி திட்டங்கள் யாவும் இரகசியமாகவுள்ளது'

### வெகுஜன இயக்கத்தலைவர்

யாழ்ப்பாணம், திங்கள்

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினர் இன்றும் ஆலயப் பிரவேச முயற்சியில் ஈடுபடுவார்களென்றும் கோவிலுக்கருகிலுள்ளகாணிகளிலோ, ரோட்டின் அருகிலோ யாராவது பொங்கினால் தாங்களும் பொங்குவார்களென்றும், வெகுஜன இயக்கப் பிரமுகர் ஒருவர் நேற்று தெரிவித்தார்.

எந்த இடத்திலும் சமத்துவத்தை நிலைநாட்டுவதே தங்கள் நோக்கமென்றும் கோவிலுக்குச் செல்லும் தங்களை பொலிசார் தடுத்தால் அதே இடத்தில் சத்தியாக்கிரகம்செய்வார்களென்றும் அவர் மேலும் தெரிவித்தார்

கடந்த திங்கட்கிழமை பன்றித்தலைச்சி அம்மன் கோவிலில் நடந்த சம்பவங்களைத் தொடர்ந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தலைவர் திரு. எஸ். என். ரி. நாகரத்தினம் இயக்கத்தினர் மத்தியில் நேற்றுச் சுறுசுறுப்பாகக் காணப்பட்டார். அவரது உடலில் கட்டுப்போடப்பட்டிருந்தது. நமது திட்டம் இரகசியமாக வைக்கப்பட்டிருக்கிறது என்று திரு. நாகரத்தினம் நமது நிருபரிடம் கூறினார்.

### ஆஸ்பத்திரியிலும் பாகுபாடு

கைக்குண்டுச் சம்பவத்தினால் காயமடைந்த சிறுபான்மைச் சமூகத்தினர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டபோது அங்குகூட பாகுபாடு காட்டப்பட்டதென்றும் திரு. நாகரத்தினம் தெரிவித்தார்

இன்று கோவிலுக்குச்செல்லும் மாதர் கோஷ்டிக்குப் பொலிசாரால் தேடப்பட்டுவரும் செல்வி செல்லக்கிளி தலைமை தாங்குவாரெனத் தெரியவருகிறது. இன்று செல்லும் கோஷ்டி தேவாரம், பக்திப்பாடல்கள் பாடிக்கொண்டு செல்லும் என்றும் தெரியவருகிறது.

## திடீர் பாலங்கள் போல திடீர் வீடுகள்வருகிறது

### உள்ளூராட்சி அமைச்சர் தகவல்

குருநாகல், ஞாயிறு

''உள்ளூர் ஆட்சி மன்றங்களின் தலைவர்கள், உபதலைவர்கள் ஆகியோரை இதுகாலவரையும் உள்ளூராட்சி மன்ற அங்கத்தவர்களே தெரிவு செய்தார்கள். ஆனால் இனிமேல் பொது மக்களே அவர்களைத் தெரிவு செய்வார்கள் என நம்புகிறேன். இதனால் பொது மக்கள் தாங்கள் விரும்பிய தகுதியான தலைவரைச் சுதந்திரமாகத் தெரிவு செய்ய வசதியேற்படும்.''

இவ்வாறு குருநாகலுக்கு உத்தியோகபூர்வமாக விஜயம் செய்த உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார். தற்போது நடைபெறும் ஊழல்கள், நிர்வாகச் சீர்கேட்டுக்கு இதனால் முற்றுப்புள்ளி வைக்கலாம் எனவும் கருதுவதாக கூறிய அமைச்சர் தொடர்ந்து பேசுகையில், நகரங்களினதும் கிராமங்களினதும் முன்னேற்றத்துக்கு வேண்டிய உதவிகளை செய்வதற்கு தாம் ஆயத்தமாக இருப்பதாகவும் தேசிய அரசாங்கம் திடீர் பாலங்களை மக்கள் வசதிக்காக உருவாக்கியதுபோல வீடில்லாப் பிரச்னையைத் தீர்ப்பதற்காக திடீர் வீடுகளை சில மணி நேரத்தில அமைக்கத்தக்கவாறு ஒரு திட்டத்தைக் கொண்டுவரவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

---

கிளிநொச்சி, சனி

கிளிநொச்சி வாலிபர்கள் 11-வது தமிழரசு மாநாட்டிற்குச் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றனர். வருகிற 7-ம் திகதி காலை கிளிநொச்சியிலிருந்து ஆரம்பமாகும். கிளிநொச்சித் தமிழரசு வாலிப முன்னணியினரின் சைக்கிள் ஊர்வலத்தில் நூற்றுக்கு மேற்பட்டோர் பங்குபற்றிவர். அன்று மாலை மாநாட்டை சென்று அடைவர்.

## சுப்ரீம்கோர்ட்டில் வழக்கு

### காங்கேசன்துறை ப ச, அங்கத்தவர் யோசனை

காங்கேசன்துறை, சனி

'சியவச' டிக்கட்டுகளை விற்கவேண்டுமென ஆசிரியர்கள்கட்டாயப்படுத்தப்படக் கூடாதுஎனக் கல்விஅமைச்சு சுற்றுநிருபம்மூலம் உத்தியோகத்தர்களுக்கு கட்டளையிட்டிருந்தபோதும், ஆசிரியர்களும் நிர்வாக அதிகாரிகளும் சிட்டுகளை விற்பனை செய்யவேண்டுமெனப் பல வழிகளாலும்நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள். இவ்வாறான நிர்ப்பந்தம் தொடர்ந்து இருக்குமானால் மே மாதம் வரை காத்திருந்து அதன் பின்னர் சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தாக்கல் 'செய்யப் படவேண்டும்'.

காங்கேசன்துறைப் பட்டினசபையின் விசேஷகூட்டமொன்றில் பேசுகையில் 1-ம் வட்டார அங்கத்தவர் திரு. சு. கிருபாமூர்த்தி இவ்வாறு கூறினார்.

மாணவர்கள் தெருக்களில் சியவச டிக்கட்டுகளை விற்று வருகிறார்களென்றும் "நாகரிகமானதும் அவசியமானதுமான செயல் ஒன்றை கல்வி அமைச்சு செய்துவருவதாகவும் 4-ம் வட்டார அங்கத்தவர் திரு. சு. வே. சீனிவாசகம் குறிப்பிட்டார்.

மூன்றும்வட்டார அங்கத்தவரான திரு. திடவீரசிங்கம் பேசுகையில வயது வந்த மாணவிகள் சியவச சுவீப் டிக்கட்டுகளை விற்று வருவது தமிழ்சமுகத்திற்கு ஏற்ற தலலவென்று குறிப்பிட்டார்.

இக்கூட்டம் பட்டினசபை தலைவர் திரு. ஆ. வ: சதாசிவம்தலைமையிலநடை பெற்றது,

பட்டினசபைத் தலைவர் திரு ஆ, வ. சதாசிவம் தலைமையில நடைபெற்ற கூட்டத்தில் திரு. கிருபாமூர்த்தி இதுசம்பந்தமாகக் கொண்டுவந்த பிரேரணை யொன்றிலேயே மேற்படி கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. இப்பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.



கோண்டாவிலில் புதிய மின்தறி நிலையக் கட்டடத்துக்கு கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். கந்தவனம் சமீபத்தில் அத்திபாரக்கல் நாட்டினார்

## இலங்கையின் சனதொகை

### ஒருகோடியை மீறுகிறது

கோட்டை, ஞாயிறு

சென்றவருடம் இறுதியில் நடைபெற்ற இலங்கை குடிசன மதிப்பீட்டின்படி இலங்கையின் சனத்தொகை ஒருகோடியே இருபது லட்சமாகியுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது. அதிகரித்துவரும் சனத்தொகையைக் கட்டுப்படுத்த குடும்பநலத் திட்ட அமுலில் அரசாங்கம் தீவிரகவனம் செலுத்தியுள்ளது.

---

யாழ்ப்பாணம், ஞாயிறு

நேற்று யாழ்ப்பாணம்—கேரதீவு பாதையில் சேவையில் ஈடுபட்டிருந்த பஸ்கள் இரண்டு பழுதடைந்ததால் பிரயாணிகள் பெரிதும் அவஸ்தைப்படவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

நாளுக்குநாள் சீர்கேடடைந்துவரும் இந்த பஸ் சேவைபற்றி இ. போ. ச. நடவடிக்கை எடுக்காதது குறித்து இப்பகுதி மக்கள் அதிருப்தி கொண்டுள்ளனர்.

---

கொழும்பு, ஞாயிறு

கச்சதீவுப் பெருநாளின் போது இலங்கைக்கு சட்டவிரோதமாக 111பேர் வந்தார்களென்றும் இவர்களில் 29 பேர்களைத் தவிர மற்றவர்கள் திருப்பி அனுப்பப்பட்டு விட்டார்களென்றும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலரிக் அபயகுணவர்த்தன நேற்றுநமது நிருபரிடம் தெரிவித்தார்.

இப்போது சட்டவிரோத குடியேற்றம் குறைந்து வருவதாகவும் இதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் நல்ல பலனளித்துவருவதாகவும் ஐ. ஜி. பி. எடுத்துக் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு புதிய கடதாசி தொழிற்சாலை நிறுவப்படும்

## 1500 பேருக்கு வேலை வசதி

கோட்டை, ஞாயிறு

வாழைச்சேனையிலுள்ள கடதாசித் தொழிற்சாலையைவிட மேலும் இரு கடதாசித் தொழிற்சாலைகள் எம்பிலிபிட்டியா, இராஜங்கனை ஆகிய இரு இடங்களிலும் நிறுவப்படவிருக்கின்றன. இந்த இரு தொழிற்சாலைகளும் நிறுவப்பட்டவுடன் இலங்கை 1974-ல் கடதாசியில் தனது சுயதேவையைப் பூர்த்திசெய்துவிடுமென அரசாங்கம் நம்புகிறது.

1970-ம் ஆண்டின் இறுதியில் இவ்விரு திட்டங்களும் பூர்த்தியாகி 1971-ல் எம்பிலிபிட்டியா 15000 தொன் கடதாசியையும், இராஜங்கனை 30,000 தொன் கடதாசியையும் உற்பத்திசெய்யுமென நம்பப்படுகிறது. நாட்டில் கடதாசி சுயதேவையைப்பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் கிழக்கிலங்கைக் கடதாசிக் கூட்டுத் தாபனம் இதை மேற்கொண்டுள்ளது. இவைகளை நிறுவுவதற்கு 19 கோடி ரூபா செலவாகுமெனக் கணிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட இந்த இரு இடங்களிலும் கடதாசி உற்பத்திக்கான வைக்கோல், 'யூகலிப்ரஸ்' புல் ஆகிய இரு மூலப்பொருள்களும் காணப்படுவதாலேயே இவ்விடங்களில் கடதாசித் தொழிற்சாலைகளை நிறுவத் தீர்மானிக்கப்பட்டது. இவ்விரு தொழிற்சாலைகளுக்கான கட்டடவேலைகள் இவ்வருட இறுதியில் ஆரம்பிக்கப்படுமெனவும் இவற்றிற்கான இயந்திரசாதனங்கள் 1970ம் ஆண்டு டிசம்பருக்கு முன்னர் பெறப்படுமெனவும் நம்பப்படுகிறது.

இவ்விரு கடதாசித் தொழிற்சாலைகளை நிறுவுவதற்குத் தேவையான பணத்தைப் பெறுவதற்கு அரசாங்கம் உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியனவற்றின் அதிகாரிகளோடு பேச்சுவார்த்தை நடத்துகிறது. இரு கைத்தொழிற் சாலைகளும் பூர்த்தியானால் 1500 பேருக்கு வேலைவாய்ப்பு ஏற்படலாமெனவும் நம்பப்படுகிறது.

# இன்றைய பலன்

7-4-69

பங்குனி மீ 25-ம் உ திங்கட்கிழமை

திதி- பஞ்சமி பகல் 3-47 மேல் சஷ்டி.

நட்சத்திரம்- கேட்டை இரவு 1-40 மேல் மூலம்

ராகுகாலம்- 7-38 9-08.

சுபநேரம்- 12-08 — 1-38.

இன்று பிறந்தவர்களுக்கு — எதிர்பாராத வரவு உங்களைத் திகைக்க வைக்கலாம். கட்டிடக் கலைஞர்களுக்கு மிகவும் சிறப்பான காலம். குடும்பஸ்தர்கள் வாழ்வில் இனிமையான சம்பவங்கள் இடம்பெறும். கன்னிப் பெண்கள் வாழ்வில் திடீர் திருமணங்கள் இடம்பெறும் நல்லாண்டாகும்

மேஷம்- அரச பயம், ஆயுதபீடை.

ரிஷிபம்- காதல்செய், கவலைகள் பறக்கும்.

மிதுனம்- நடந்ததை நினைத்து வருந்தாதே, நல்லதைச் செய்.

கடகம்- குரு விசுவாசம், கொள்கையில் முன்னேற்றம்.

சிம்மம்- தங்கக்குணம், தரத்திலும் உயர்வு.

கன்னி- புதுவழி துறக்கும், புகழும் பரவும்.

துலாம்- உதவிக்கு விரைவீர் உபத்திரவம் உண்டு.

விருச்சிகம்- முயற்சி இருப்பினும், முகக் கவர்ச்சி வேண்டும்.

தனுசு- குடும்பச்சிறப்பு செல்வாக்குப் பெருகும்.

மகரம்- குடும்பத்தில் புயல் விரக்தி நிலை.

கும்பம்- பந்த பாசம், பரவசநிகழ்ச்சி.

மீனம்- பனிமலர் பார்வை, பரிவின் உதயம்.

—சோதிடக்கலாநிதி

திருமலை வேலுப்பிள்ளை

# இரத்த தானம் செய்தால் தொழில் பெறுவது சுலபம்?

## சுகாதார அமைச்சு நடவடிக்கை

கோட்டை, ஞாயிறு.

இலவசமாக இரத்ததானம் செய்பவர்களுக்கு தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களை வழங்க சுகாதார அமைச்சு ஆலோசித்து வருகிறது. இதற்கான பேச்சுவார்த்தையில் தேசிய இரத்தச்சேமிப்பு வங்கியுடன் சுகாதார அமைச்சு ஈடுபட்டுள்ளது.

40 தடவை இரத்த தானம் செய்பவர்களுக்கு தங்கப் பதக்கமும், 20 முறை செய்பவர்களுக்கு வெள்ளிப் பதக்கமும், 10 முறை செய்பவர்களுக்கு வெண்கலப் பதக்கமும் வழங்கப்படும். இப் பதக்கங்களை வைத்திருப்பவர்கள் உத்தியோகம் தேடும்போது மேலதிக தகைமையுடையவர்களாகக் கணிக்கப்படுவார்களாம் இத்திட்டத்தால் நாட்டில் இரத்தத் தட்டுப்பாடு ஏற்படாதென சுகாதார அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயகா கருதுகிருர்.

## புயலில் அகப்பட்ட வள்ளம்

யாழ்ப்பாணம், ஞாயிறு.

திடீரெனக் கிளம்பிய புயலில் அகப்பட்ட பிரயாணிகள் படகு ஒன்று நடுக்கடலில் அல்லோலகல்லோலப்பட்டது. பூனகரிசங்குப்பிட்டி ஆயச் சேவையில் நேற்று மாலை ஈடுபட்டிருந்த இந்த வள்ளத்தில் சென்ற சுமார் 52 பிரயாணிகளில் சிறுவர்களும், பெண்களுமிருந்தனர்.

தொடர்ந்து படகைச் செலுத்த முடியாத வள்ளக்காரர் பிரயாணிகளைத் திரும்பிக்கொண்டுவந்து கேரதீவுக் கரையில் சேர்த்தனர். அவஸ்தைப்பட்டுத் திரும்பிய இவர்கள் மறுநாட்காலை வரை துறைமுகத்தில் தங்கியிருக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

ந நி.

## காயமுற்றவர் ஆஸ்பத்திரியில்

நல்லூர், ஞாயிறு

அராலி கொட்டைக்காட்டைச் சோந்த மாரியர் தியாகராசா என்பவர் அடிகாயங்களுடன் யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உழவு யந்திரத்தில் வந்திறங்கிய அதே ஊரைச்சேர்ந்த பெரியதம்பி சின்னராசா, சின்னராசா சின்னத்தம்பி, மணியம் ஆகிய மூவரும் இவரைத் தாக்கியதாக பொலிசாருக்கு வாக்கு மூலமளிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக சங்கானை பொலிசார் விசாரணை நடத்துகிருர்கள்.

## செய்திச் சுருக்கம்

நீச்சல்துறையில் இலங்கை இளைஞர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக இலங்கை அரசின் அழைப்பின் பேரில் உலகப் புகழ்பெற்ற நீச்சல்துறை நிபுணர் திரு. ஆர். பிராவ் இலங்கை வந்துள்ளார்.

0 0 0

### ஆபத்து நீங்கவில்லை

மக்களின் ஜனநாயக மத உரிமைகளுக்கு இருந்து வந்த ஆபத்து பொதுத்தேர்தலில் கூட்டாட்சிக்கட்சியினர் தோல்வியடைந்தவுடன் நீங்கிவிட்டது என்றில்லை. கூட்டணியாளரின் மாக்ஸீய நண்பர்கள் பொதுமக்களின் கண்களில் மண்ணைத்தூவி அந்த உரிமைகளை பறிப்பதற்கு மீண்டும் முயன்றுகொண்டிருக்கிருர்கள்.

இவ்வாறு கடுகண்ணுவையில நடைபெற்ற ஒரு கூட்டத்தில் போக்குவரத்து அமைச்சர் திரு. ஈ. எல். பி. ஹுருள்ள கூறினுர்.

0 0 0

### வேலை நிறுத்தம்

பூண்டுலோயா டன்கிளன் தோட்டத்தில் இரண்டாயிரம் தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளனர். அங்கு கடமையாற்றிய மானேஜர் இளைப்பாறியதை எதிர்த்தே இவ் வேலைநிறுத்தம் நடைபெறுவதாகக்கூறப்படுகின்றது.

0 0 0

### நகை, பணம் களவு

புலோலி கிழக்கிலுள்ள வீடொன்றில் ரூ. 7000 பெறுமதியான ரொக்கமும்

## பழைய மாணவர் கூட்டம்

காரைநகர், ஞாயிறு

காரைநகர் யாழ்நகர் கலாசாலை பழைய மாணவர் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் இம்மாதம் 15-ந் திகதி மாலை கலாசாலை மண்டபத்தில் கல்லூரி அதிபர் திரு. மு. வைத்தியநாதன் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

## சீன அரிசிக் கப்பல்

காங்கேசன்துறை ஞாயிறு

சீன அரிசியுடன் 'ஒபாறை என்னும் அரிசிக்கப்பல் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வந்து சேர்ந்துள்ளது. 9,812 தொன் அரிசியைக் கொண்டுவந்துள்ள இந்த கிரேக்ககப்பல் 14 நாட்கள் வரை இங்கு தங்கிநிற்கும்.

## இன்று பொங்கலும் தீக்குளிப்பும்

உருத்திரபுரம், ஞாயிறு

உருத்திரபுரம் பொறிக்கடை அம்மன் கோவிலில் இம்மாதம் 7-ம் திகதி பொங்கலும் தீக்குளிப்பும் நடைபெறவிருக்கிறது.

## சிவதீட்சை பெற்றனர்

உருத்திரபுரம், ஞாயிறு

உருத்திரபுரம் சிவாலயத்தில் கடந்த புதனன்று சிவதீட்சை அளிக்கப்பட்டது. பெரியவர்களும் தாய்மார்களும் சிறுவர்களுமாக 34 பேர் சிவ தீட்சை பெற்றுக் கொண்டனர். சிவஸ்ரீ இ. நவரத்தினக் குருக்கள் தீட்சைவழங்கினுர். மகேசுர பூசையும் நடைபெற்றது.

வடக்கு-கிழக்கு பகுதிகளில்

# வாக்குமூலங்களை பொலிசார் தமிழில் பதிய வசதியுண்டு

## ஐ. ஜி. பி கூறுகிருர்

கோட்டை, ஞாயிறு

''வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள பொலிஸ் நிலையங்களில் வாக்குமூலங்களை தமிழில் பதிவு செய்யக்கூடிய வசதிகள் உண்டு, யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் பொலிசாரில் 50 சத விகிதத்தினர் தமிழர்களே. ஆகையினுல் இப்பகுதியில் தமிழில் பதிவு செய்வதில் சிரமம் ஏற்பட முடியாது''

இவ்வாறு பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலரிக் அபயகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

வடக்குக்கிழக்குமாகாணங்களில் வாக்குமூலங்களைப் பதிவு செய்வதற்கு போதியளவு தமிழ் பொலிசார் இல்லை என்று கூறிக்கொள்வது தவறு என்று கூறிய திரு. அலரிக் அபயகுணவர்த்தன, தமிழ்ப்பகுதிகளில் உள்ள ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களிலும் மூன்றில் ஒருபங்கு தமிழ்ப்பொலிசார் கடமையாற்றுகின்றனர். என்றும் சுட்டிக்காட்டினுர்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

முட்டை இடும் கறுப்புக் கோழிகள் Ex. Nel Farm, மற்றும் ஒரு மாதச் சேவற் குஞ்சுகளும் பேட்டுக் குஞ்சுகளும் உடனடியாக விற்பனைக்குண்டு. பிரணவப் பண்ணை, கந்தரோடைவீதி, சுன்னுகம். 910

### தேவை

பாண், பணிஸ், பிஸ்கட், கேக் முதலியன தயாரிக்கத் தெரிந்த உதவி பேக்கர்மார் வேலைக்கு உடனே தேவை. நேரில் வரவும் அல்லது விண்ணப்பிக்கவும். மு. இராசரத்தினம், இலட்சுமி பேக்கரி, அச்சுவேலி. 916

வெல்டர்- (காஸ்-எலெக்றிக்) கிருங்சாவ்ற் நிரப்புதல், மெற்றல், ஈயம் வைத்தல் முதலிய வேலைகளில் அனுபவம் வாய்ந்தவர் விண்ணப்பிக்கவும். யந்திரம்ஸ், 48, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 917


கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

விளம்பரம்

தாள்களாகவுள்ள நியூஸ்பிரின்டைத் தவிர, ஏனைய சகலவிதமான உள்ளூர் உற்பத்திக் கடதாசிகளையும் இறக்குமதி செய்யப்பட்ட கடதாசிகளையும், கட்டுப்பாடில்லாமல் விற்பனை செய்வதற்கு, இக் கூட்டுத்தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்ட வியாபாரிகளுக்கும், கையிருப்பாளர்களுக்கும் இப்பொழுது அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

அச்சடிப்பாளர்களுக்கான நியூஸ்பிரின்ட் விற்பனை, அவர்களின் பங்கீட்டுத் தொகையில் 25% கட்டுப்படுத்தப்படும்.

பத்திரிகைகள், பருவ வெளியீடுகள், சஞ்சிகைகள் ஆகியன வெளியிடுபவர்களும், மற்றவர்களும் தங்களுக்குத் தேவையான நியூஸ்பிரின்டிற்கு, இல. 356 யூனியன் பிளேஸ், கொழும்பு-2ல் இருக்கும் எங்களின் விற்பனைப் பகுதிக்கு விண்ணப்பிக்கலாம்.

பொது முகாமையாளர்

கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

த. பெ 1367,
கொழும்பு-2,
31-3-1969. 1502

WANTED CANVASSERS
(PART-TIME)
on Commission basis
GOLDEN OPPORTUNITY
FOR MALES & FEMALES!
MAKE MONEY

விண்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன் - பாரதி
நடித்த
வாலிப விருந்து

ராஜா 84வது தினம்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30. 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்கள்
அரைக்கட்டணத்துடன்
அனுமதிக்கப்படுவர்

மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
எம். ஜி. ஆர். - கே. ஆர். விஜயா
நடித்த

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45p.m
Poya, PrePoya 10-30 A.M.
Kazgaras - Steward Granger
Gabriellalicudi
in
THE LAST SAFARI

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி: 6-30, 9-30க்கு மட்டும்
சிவாஜி—சௌகார் ஜானகி
நடித்த


தமிழரசுக்கட்சி

## மகாநாட்டுக்கு வரும் பிரேரணை

யாழ்ப்பாணம், திங்.

'தமிழ்த்திரைப்பட வெட்டுக்கு ஆட்சி மன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் போராட வேண்டும்' என்று கோரும் பிரேரணை ஒன்றை தமிழரசுக் கட்சியின் கயிலாய பிள்ளையார் கோயில் வட்டாரக் கிளைச் செயலாளர் திரு, எஸ். சண்முகராசா இன்று ஆரம்பமாகும் தமிழரசுக்கட்சி மகாநாட்டில் சமர்ப்பிக்கவிருக்கிருர்.

உடுவிலில் நடைபெறும் இம்மகாநாட்டில், தேசிய அரசாங்கத்திலிருந்து வெளியேற வேண்டும் என்று கோரும் பிரேரணையொன்றையும், சிங்கள ஊழியர்களும் தமிழ்படிக்க வேண்டுமென்ற சட்டம் வரும்வரை தமிழ் ஊழியர் சிங்களம் படிக்காமலிருக்க வேண்டும் என்று கோரும் பிரேரணையையும் இவர் சமர்ப்பிக்கவிருக்கிருர். (ந, நி.)


இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

ஈழகேசரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரைக்கட்டணத்துடன்
அனுமதிக்கப்படுவர்

Gabriellalicudi
in
THE LAST SAFARI


மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
எம்.ஜி.ஆர். - கே.ஆர். விஜயா
நடித்த
பணம்
படைத்தவன்

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி: 6-30, 9-30க்கு மட்டும்
சிவாஜி—சௌகார் ஜானகி
நடித்த
மோட்டார்
சுந்தரம்பிள்ளை
4-15க்கு மாத்திரம்
John Wyne Robe t Michin
in
ELDORADO

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, & 9-45
Jay Mukerji
Asha Prackh
in
LOVE IN
TOKYO
(HINDI)

REGAL at JAFFNA
Daily 4-00, 7 & 10-00 P.m.
PrePoya Poya 10-30 A.M.
SPY SMASHER
(Serial சீரியல்)

இன்று முதல் குதூகல ஆரம்பம்!
இங்ஸ்லி-மைலன், (கொழும்பு)
பிளாசா (வெள்ளவத்தை)
வெலிங்டன், (யாழ். நகர்)
விஜயா (மட்டுநகர்)
ஸ்ரீ கிருஷ்ணு
(திருமலை)
மற்றும் சினிமாஸ் திரைகளில்




கலைப்பேரரசர் எம். ஜி. ஆர்.
ஆடலழகி ஜெயலலிதா
எம். ஆர். ராதா, நாகேஷ், மனோரமா
மற்றும் பலர் நடித்த
சரவணா பிலிம்ஸ்
சந்திரோதயம்
டைரக்ஷன்: கே. சங்கர்

4-வது வெற்றி வாரம்!
கெப்பிட்டல் (கொழும்பு)
முத்துராமன், ராஜன், பாரதி, பானுமதி
நடித்த
பூவும் பொட்டும்

திருமலை வேலுப்பிள்ளை

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 7—4—69

செய்திகள் காலை 7-00, பகல் 12-45. மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீ. அன் 61 மீ.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 உலக சுகாதார தினம்.

இரவு 6-15 புல்லாங்குழல், 6-45 பாவளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 முத்திநெறி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-45 பாட்டு — வி. செல்லத்துரை.

— —

## குளம் சீர்கேடு

கரவெட்டி, திங்கள்

கரவெட்டி மேற்குப் பகுதியில் வாழும் சிறுபான்மைத் தமிழர்கள் பாவனையிலிருக்கும் உச்சில்குளம் மிகவும் சீர்கேடான நிலையில் உள்ளதாம். பல வருடகாலமாக குளம் துப்புரவு செய்யாமல் இருந்தும் தொடர்ந்து பொதுமக்கள் பாவித்து வருகிறார்களாம். இதனால் தொற்றுநோய் பரவுவதாகவும் அறியப்படுகிறது. மீன் வகைகள் செத்துக்கிடந்து துர்நாற்றம் வீசிக்கொண்டிருக்கும் இக்குளத்தைத் தவிர வேறு நீர் வசதியின்மையால் இங்குள்ள ஆடு, மாடுகள் இக்குளத்து நீரையே குடிக்கின்றனவாம்.

இதுசம்பந்தமாக உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் முறையிட்ட வள்ளுவர் சனசமூகநிலையத் தலைவர் திரு. வா ஆழ்வாப்பிள்ளை குளத்துநீரையும் அவரிடம் எடுத்துச் சென்று காண்பித்தார். உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதியளித்தார்.

தம்பி, மணியம் ஆகிய மூவரும் இவரைத் தாக்கியதாக பொலிசாருக்கு வாக்கு மூலமளிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக சங்கானை பொலிசார் விசாரணை நடத்துகிறார்கள்.

## ஈழகேசரி பொன்னையா நினைவு விழா

### இன்றைய நிகழ்ச்சிகள்

அளவெட்டி, திங்.

குருப்பசிட்டி சன்மார்க்க சபையின்ஆதரவில் நேற்றுத் தொடக்கம் நடைபெற்று வரும் 'ஈழகேசரி' பொன்னையா நினைவுவிழா இன்றைய இரண்டாம்நாள்நிகழ்ச்சிகள் வருமாறு:

யாழ் மெற்றல் இன்டஸ்ரீஸ் அதிபர் திரு, தா. திருநாவுக்கரசு தலைமையில் இடம்பெறும் நாடகப்போட்டியில் சிவகாமிஅம்மன்கலாமன்றத்தின் 'மனக்கோயில்' என்னும் நாடகமும், தென்மராட்சி முத்தமிழ்க் கலைமன்ற 'மனமாற்றம்' என்னும் நாடகமும், உரும்பராய் ஆத்மஜோதி கலாமன்ற 'காரிருள்' என்னும் நாடகமும், வசாவிளான் கலைவாணர்கலாமன்ற 'நேர்மையின் எல்லையிலே' என்ற நாடகமும், சித்தங்கேணி விவேகானந்தா நாடகமன்ற 'திதியனின் காதலி' என்னும் நாடகமும், பொன்னொலி நாடகமன்ற 'மாதவனே மன்னித்தருள்வாய்' என்னும் நாடகமும் வசாவிளான்செல்வம்நாடகமன்றத்தின் 'ஒளிபிறந்தது உயிர் பறந்தது' என்னும் நாடகமும் இடம்பெறும்.

றியதை எதிர்த்தே இவ் வேலைநிறுத்தம் நடைபெறுவதாகக்கூறப்படுகின்றது.

0 0 0

### நகை, பணம் களவு

புலோலி கிழக்கிலுள்ள வீடொன்றில் ரூ. 7000 பெறுமதியான ரொக்கமும் நகையும் திருடப்பட்டு விட்டதாகக் கூறப்படுகின்றது.

0 0 0

### தொழிலாளியும் முதலாளியும்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொருளாதாரத்திட்டங்களின் மூலம் தொழிலாளர்கள் பணத்தைச்சேர்த்து தோட்டங்களை வாங்கி நடத்துவதின் மூலம் முதலாளிகளாகலாம் என்று திரு. எஸ். தொண்டமான் நாவலப்பிட்டியில் நெவன்ஸ்ரே தோட்டத்தில் ஒரு கூட்டத்தில் பேசியபோது கூறினார்.

0 0 0

### கைதிகளுக்கு உணவுப் பார்சல்

சிறையிலிருக்கும் கைதிகளுக்கு உறவினர்கள் புதுவருடத்தினத்தன்று உணவுப் பார்சல்களைக்கொடுக்க முடியும் என்று தெரிகின்றது மரணதண்டனை பெற்றுள்ள கைதிகளுக்கு மட்டும் இச் சலுகை இல்லையாம்.

0 0 0

### இடைக்கால அறிக்கை

சம்பளக் கமிஷனின் இடைக்கால அறிக்கை மே மாதம் வாக்கில் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிகின்றது.

தமிழரசுக்கட்சி

## 'கா. பொ. இரத்தினத்தை பொதுச்செயலாளர் ஆக்குக

### கோண்டாவில் கிளை தீர்மானம்

கோண்டாவில், ஞாயிறு

தேசிய அரசாங்கத்திலிருந்து தமிழரசுக்கட்சிதனது உறவை உடனடியாக துண்டிக்கவேண்டுமெனக்கோரும் தீர்மானம் ஒன்று நேற்று நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் கோண்டாவில் கிளையின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

திரு. அ நவரட்ணம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில், கடந்த நாலு வருடங்களாக அரசாங்கத்துடன் கட்சிதொடர்புகொண்டிருந்த போதிலும் தமிழ்மக்களாகிய எமக்கு எதுவித விமோசனமும் கிடைக்கவில்லையென்றும் இதற்குப்பதிலாக எமது உரிமையை இந்த அரசு படிப்படியாக பறித்துவருகின்றது என்றும் கூறிய அவர், இதனால் அரசாங்கத்துடன் தொடர்ந்து இருப்பதில் எல்வித பிரயோசனமும் இல்லையென்றுகூறினார்.

அரசாங்கத்திலிருந்து வெளியேறி எமது உரிமைகளைப்பெறுவதற்கு அறப் போராட்டத்தில் குதிக்க வேண்டும் எனவும், பண்டிதர் க. பொ. இரத்தினத்தை கட்சியின் செயலாளராக நியமிக்கவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டு, பொதுக்குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

WANTED CANVASSERS
(PART-TIME)
on Commission basis
GOLDEN OPPORTUNITY
FOR MALES & FEMALES!
MAKE MONEY
IN YOUR SPARE TIME!!
Apply immediately to
Messrs
THAMBY & Co.,
VANNARPONNAI.

BAYER CASSELLA BASF 1865
அழியாத சகலநிற சாயப் பொருள்களும்
சாய ரசாயனங்களும்
ஜவுளிகளைக் குறைந்த செலவில் சுலபமாக
சாயம் ஊட்டவும் அச்சடிக்கவும்
உகந்தவை
சாயம் ஊட்டல்: இண்டன்த்றென் — வற்
லெவாபிக்ஸ்-இ — றீ அக்ரிவ்
அச்சடித்தல்: அக்ரமின் — பிக்மென்ற்
ஹெலிஸறின் — பிக்மென்ற்
லெவாபிக்ஸ்-பி — றீ அக்ரிவ்
சொலிடாஸொல் — றீ அக்ரிவ்
இருப்பிலிருந்து கிடைக்கும்
விபரங்கட்கு:
HAYLEYS
ஹேலீஸ் லிமிட்டட்
400, டீன்ஸ் ரோட், கொழும்பு-10. தொலைபேசி: 96333

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 40 அமெரிக்க நகரங்களில் வியட்னும்போர்நிறுத்தம்கோரி ஆயிரக்கணக்கானேர் ஆர்ப்பாட்டம்

நியுயோர்க், ஏப்ரல் 6
வியட்னமில் போர் நிறுத்தம் ஏற்படவேண்டுமெனக் கோரி நியுயோர்க் நகரில் இன்று ஆயிரக்கணக்கானேர் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினுர்கள்.

திரு. நிக்ஸன் அதிபர் பதவியை ஏற்றுக்கொண்ட பின்னர் நடைபெறும் முதல் ஆர்ப்பாட்டமாகும் இது. அதிபர் பதவியை அவர் ஏற்றுக்கொள்ள விருந்த வேளையிலும் இப்படியான ஓர் ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

சிகாகோ நகரில் ஆயிரக் கணக்கானவர்கள் வியட்னும் போரை உடனடியாக முடிவுக்குக்கொண்டு வரும் படிகோரி ஊர்வலம்போனுர்கள். சில தினங்களுக்குமுன் நீக்ரோ மக்கள் நடத்திய கலவரங்களால் சிக்காகோ நகர் இன்னமும் பதட்ட நிலையிலேயே இருக்கின்றது என்ருலும் இன்றைய ஆர்ப்பாட்டங்களின்போது அசம்பாவித சம்பவம் எதுவும் இடம்பெறவில்லை.

மேலும் 40 நகரங்களில் இம்மாதிரி ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடைபெறுகின்றன.

## பிரிட்டனில் காந்தி நூற்றண்டுக் கொண்டாட்டம்

புதுடில்லி, ஏப்ரல் 6
பிரிட்டனிலுள்ள காந்தி நூற்றுண்டு விழா கமிட்டிக்கு பிரிட்டிஷ் வெளிவிவகார, காமன்வெல்த் இலாகா 5,000 ஸ்டெர்லிங் மானியம் வழங்கும். இதற்கு பிரிட்டிஷ் பொக்கிஷ மந்திரி அங்கிகாரம் கொடுத்துவிட்டார்.

காந்தி நூற்றுண்டு விழா சம்பந்தப்பட்ட நடைமுறை செலவுகளுக்கும், ஞாபகார்த்த நூலகம் நிறுவுவதற்கும் இந்தப்பணம் பயன்படுத்திக் கொள்ளப்படும்.

இந்தக்கமிட்டியின் தலைவர் மௌண்ட் பேட்டன் பிரபு.

மகாத்மாவின் பிறந்ததினமான அக்டோபர் 2-ந் திகதியன்று ஒரு விழாவுக்கு இக்கமிட்டி ஏற்பாடுசெய்துள்ளது.

1931-ம் வருஷத்தில் காந்திஜி லங்காஷயரிலுள்ள டார்வன் நகருக்கு விஜயம் செய்ததன் ஞாபகார்த்தமாக சமீபத்தில் இந்நகரத்தின் நூலகத்தில ஒரு பொருட்காட்சி நடத்தப்பட்டது. அவரது விஜயம் சம்பந்தப்பட்ட பத்திரிகைச் செய்திகள், புகைப்படங்கள் முதலியன காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

## தமிழ்நாட்டில் தி. மு. க. மயக்கம் தெளிகிறதாம்

### திரு. சுப்பிரமணியம் அறிக்கை

புதுடில்லி, ஏப். 6
திராவிட முன்னேற்றக் கழகம் மீது பொதுமக்கள் கொண்டிருந்த மயக்கம் இப்பொழுது தெளிந்து கொண்டிருக்கிறது என்று திரு. தி. சுப்பிரமணியம் ... நிறைவேற்ற முடியாமலிருப்பதுதான் என்றார்.

சென்னை மாநகரசபை தேர்தலின்போது தமிழ் நாட்டில் தி. மு. க. செல்வாக்கு இழந்துவருவது அறியக்கூடியதாகவும், இந்த

## பியாப்ரா இழந்த நகரை மீண்டும் கைப்பற்றியது

லண்டன், ஏ ரல் 6
நைஜீரிய சமஷ்டி துருப்புகளால் கடந்த வாரம் கைப்பற்றப்பட்ட பிரிந்துபோன பியாவ்ராவின் முக்கிய ரயில்வே நகரான உஸிவாகோலியைமீண்டும்பியாவ்ரா படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இரண்டு நாடகள் நடைபெற்ற பயங்கர யுத்தத்தின் பின்னர் இந்த நகர் திருப்பிக் கைப்பற்றப்பட்டதாக பியாவ்ரா படைகளின் தளபதி அறிவித்திருக்கிருர்.

இந்த நகரைக் கடந்த வாரம் கைப்பற்றிய நைஜீரிய சமஷ்டிப் படையினர் அங்கிருந்து சுமார் 12 மைல் தொலைவில் பியாவ்ராபடைகளின்முக்கியநிர்வாகமுகாம் அமைந்துள்ள நகரைக்கைப்பற்ற பெரும் முயற்சி செய்துகொண்டிருந்தனர். ஆனுல் இப்பொழுது அந்த முயற்சி கைவிடப்பட்டுள்ளது.

நைஜீரிய படைகளுக்குப் பெருத்த ஆள் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகவும், தங்கள் தரப்பில் சேதம் அதிகமில்லையென்றும் பியாவ்ரா தரப்பினர் கூறினுர்கள்.

நகர் கைப்பற்றப்பட்டவுடனே வெளிநாட்டு பத்திரிகை நிருபர்கள் சண்டை இடம்பெற்ற இடங்களைப் போய்ப் பார்த்தனர். நைஜீரியப் படைகளில் இறந்தவர்கள் புறக்கணிக்கப்படுவதை அவர்கள் கண்டனர்.

பியாவ்ரா படையினர் உஸிவாக்கோலி நகரைமீண்டும் கைப்பற்றியதான செய்தியை லேகோஸில் நைஜீரிய அதிகாரிகள் 'வெறும் பிதற்றல்' என்று விவரித்தனர்.

## இந்திய காங்கிரஸ் கட்சி சீரமைப்புக்கு யோசனைகள்

புதுடில்லி. ஏப்ரல் 6
தொகுதிக் குழுவின் கருத்தையே முக்கியமான அடிப்படையாகக் கொண்டு, தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்பாளர்களைப்பொறுக்கியெடுக்க வேண்டும் என்று காங்கிரஸ் சீரமைப்புக் கமிட்டி யோசனை கூறியுள்ளது

காங்கிரஸ் வேட்பாளர்களின் ஜாபிதா, தேர்தல் நடைபெறுவதற்கு 2 வருடங்களுக்கு முன்பே தயாரித்து வைத்துக்கொள்ளப் படவேண்டுமென்றும், தொகுதிகளின் தீவிர மெம்பர்களுடைய கருத்துக்களையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும் சீரமைப்புக் கமிட்டி சிபார்சு செய்துள்ளது.

காங்கிரஸ் ஸ்தாபனத்தை பலப்படுத்தவும், திறமையாகச் செயல்படச்செய்ய வேட்பாளர்களைப் பொறுக்கியெடுக்கையில், காங்கிரஸ் ஸ்தாபனத்தின் பல்வேறு அமைப்புக்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கும் விஷயத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும் என்று கமிட்டி சிபார்சுசெய்துளது

காங்கிரஸ் ஸ்தாபனத்தின் விதிகளைத் திருத்தவேண்டும் என்று கமிட்டி சிபார்சுசெய்துள்ளது. காங்கிரஸுக்கு மிகவும் கடுமையான சோதனை ஏற்பட்டுள்ளதாகவும், காங்கிரஸ் ஊழியர்களிடையே பதற்றநிலை ஏற்பட்டிருப்பதாகவும், திட்டவட்டமான சமூக லட்சியங்களை நிறைவேற்றுவதற்குப் பாடுபடவேண்டும் என்றும் இல்லாவி[illegible] அமைப்பில் [illegible] மாறுதல்களால் மாத்திரம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 170 பேர் மூழ்கினர்

புதுடில்லி, ஏப். 6
பீகார்மாநிலத்தில் யாத்ரீகர் படகொன்று கவிழ்ந்ததால் 170 பேர் மூழ்கி மரணமாகியிருப்பதாக அஞ்சப்படுகின்றது. படகில் 200 பேர் இருந்ததாகவும் நடுஆற்றில் படகு கவிழ்ந்ததால் குழந்தைகளும் பெண்களும் உட்பட இத்தனை பேர் மூழ்கிப் போனதாகவும் கூறப்படுகின்றது முப்பதுபேர் நீந்திக் கரைசேர்ந்தனர்.

## மே. அல்ஜீரியாவில் பயங்கர பூகம்பம்

லண்டன், ஏப்ரல் 6
அல்ஜீரியாவில் நேற்று மிகப்பெரிய பூகம்பம் ஒன்றுஏற்பட்டது. மேற்குப் பிரதேசத்தில் ஏற்பட்ட இந்த பூகம்பத்தின் பாதிப்பு பயங்கரமாக இருக்கும் என்று அஞ்சப்படுகின்றது. ஆனுல் விபரங்கள் இன்னும் சரியாகக்கிடைக்கவில்லை.

கடந்தவாரம் கிழக்கு மெடிட்டரேனியனில் பயங்கரப் பூகம்பம் ஏற்பட்டு ஏராளமான நஷ்டம் விளைந்தது.

## வேலை நிறுத்தம் முடிவடைந்தது

தலவாக்கொல்லை, ஞாயிறு.
தலவாக்கொல்லை மாவட்டத்தில், கல்கந்தை தோட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் முதல் நடைபெற்றுக் கொண்டிருந்த வேலை நிறுத்தம் முடிவடைந்துள்ளது. தொழில் தகராறு நீதிமன்றம் மூலம் தொழிலாளர்களின்கோரிக்கைதீர்த்துவைக்கப்படும் என்று உறுதியளித்ததைத் தொடர்ந்து 80 நாட்கள் வரை நடைபெற்ற

## காந்தி சிலையும் மா-வோ சுவரொட்டியும்

மூஸாபர்பூர் (பீஹார்), ஏப்ரல் 6
முஸாபர்பூரில் லங்கத்சிங் கல்லூரியில் உள்ள மகாத்மா காந்தி சலவைக் கல் சிலை உருக்குலைக்கப்பட்டுச் சேதபபடுத்தப்பட்டிருந்தது.

காந்திஜியின் சிலைமீது மா-சே-துங்கைப் புகழும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

இந்தக் கொடுமையைக் கண்ட மாணவர்கள் கொதித்தெழுந்தனர். மா-சே-துங்கின் கொடும்பாவியை அவர்கள் கொளுத்தியதாகக் கூறப்படுகிறது.

முஸாபர்பூர் நகர வலது கம்யூனிஸ்ட் கிளை இந்தச் செயலைக் கண்டித்துள்ளது. இதுபற்றி விசாரணை நடத்த வேண்டுமென்று அது வற்புறுத்தியது. பொலிஸார் புலன் விசாரணை நடத்திவருகின்றனர்.

......

## சென்னையில் லட்சாதிபதி தற்கொலை

சென்னை, ஏப்ரல் 6
சென்னை ஓட்டல் ஒன்றில் லட்சாதிபதி ஒருவர் விஷம் குடித்துத் தற்கொலைசெய்து கொண்டார்.

ஆந்திர மாநிலம் ராஜமுந்திரியைச் சேர்ந்த ராமையன் ரூபா 15 லட்சம் மதிப்புள்ள சொத்துள்ளவர் என்று கூறப்படுகிறது.

இவருக்கு ஏராளமான ரூபாய் கடன் இருந்ததாம். இதனுல் ராமையன் மனம் உடைந்தது. ராஜமுந்திரியிலிருந்து சென்னைக்கு வந்து சென்னை பெரிய மேட்டில் உள்ள ஓட்டல் ஒன்றில் அறையெடுத்துத் தங்கி ஓட்டல் அறையில் விஷம் குடித்து தற்கொலைசெய்து கொண்டாராம்.

......

## செயற்கை இருதயம்

நியூயோர்க், ஏப். 6
டெக்ஸாவில் அமெரிக்க டாக்டர்களால் செயற்கை இருதயம் பொருத்தப்பட்ட 47 வயதான இருதய நோயாளி கண்விழித்துக் கொண்டு உஷாராக இருப்பதாக டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். அவர் நிலைமை திருப்திகரமாய் இருக்கின்றதாம். இந்த இருதயம் ஆர்ஜன்டைன டாக்டர் ஒருவரினுல் 9 வருட ஆராய்ச்சியின்

## தமிழ்நாட்டுக்கு உதவுவதில் மத்திய மந்திரிகள் விருப்பம்

### கோரிக்கைகளை அனுதாபத்துடன் கேட்டறிந்தனர்

புதுடில்லி, ஏப்ரல் 6
**தமிழ்நாட்டை எதிர்நோக்கியுள்ள சில அவசர பிரச்னைகளைக் குறித்து நிதி அமைச்சர் திரு.மதியழகனும், உணவு அமைச்சர் திரு. கோவிந்தசாமியும் இன்று மத்திய மந்திரிகளுடன் பேச்சு நடத்தினர். மத்திய மந்திரிகள் மிகுந்த அனுதாபம் காட்டினர்.**

தமிழ்நாட்டில் பெரும்பாலான பகுதிகளில்வறட்சிநிலவுவது விவாதத்தில் முக்கிய இடம்பெற்றது. உதவிப் பிரதம மந்திரி திரு.மொரார்ஜி தேசாயுடனும், யூனியன் உதவி மந்திரி திரு. ஜகஜீவன் ராமுடனும் இருவடும் விவாதித்தனர்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு திரு. தேசாய் மே மாதப் பிற்பகுதியில் சுற்றுப் பிரயாணம் செய்யலாம். பிரதம மந்திரி இம்மாதம் விஜயம் செய்கிருர். தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்யுமாறு திரு. ஜகஜீவன் ராமையும் இரு தமிழக அமைச்சர்களும் அழைத்துள்ளனர்.

நிதி அமைச்சர் திரு மதியழகன் திட்டக்கமிஷன் உப தலைவர் திரு. காட்கிலையும், உதவிப் பிரதம மந்திரி திரு. மொரார்ஜி தேசாயையும் சந்தித்துப் பேசிய போது மத்திய உதவியை ஒதுக்குவதற்காகப் பின்பற்றப்படும் புதிய ஏற்பாடு தமிழ்நாட்டுக்கு உதவியளவைக் குறைத்துவிட்டது என்று குறிப்பிட்டார். நான்காவது திட்டத்துக்காகத் தமிழ்நாட்டுக்கு மத்திய உதவி ரூபா 250 கோடி முதலில் உறுதி கூறப்பட்டதாகவும்,புதியஏற்பாட்டினுல் ரூ. 202 கோடியே கிடைக்கும் என்றும் அவர் கூறினுர்.

வறட்சி நிவாரண நடவடிக்கைகளுக்காக முன்கூட்டி ரூபா 1.25 கோடி அனுமதித்ததற்காக திரு. தேசாய்க்கு திரு. மதியழகன் நன்றி தெரிவித்தார். ஆனுல் வறட்சி நிவாரணத்திற்குச் சுமார் 12 கோடி ரூபா தேவைப்படும் என்ருர்.

தேசாயுடனும், திட்டக் கமிஷன் உப தலைவர் திரு. டி. ஆர். தாட்கிலுடனும் நடத்திய பேச்சுவார்த்தைகளில் கடன் தவணைகளை மாற்றியமைக்கும் பிரச்னையை நிதியமைச்சர் மதியழகன் கிளப்பினுர். குறியபாக, பழையசென்னை மாநிலத்தில் இருந்த ராயல் சீமைப் ...ரண வேலைகளுக்காகச் செய்த செலவில் மாநிலத்துக்கு மத்திய அரசு கொடுத்த ரூ. 13 கோடியைத் திருப்பிச் செலுத்துவதற்கான தவணையை மாற்றியமைக்க வேண்டும் என்று உதவிப் பிரதமரிடம் மதியழகன் கோரினுர். இந்தக் கடன் இந்த ஆண்டு திருப்பித்தரப் படவேண்டும்.

மூன்று லட்சம் டன் உணவு தானியங்கள் அளித்து உதவும்படி மாநிலம் தெரிவித்த கோரிக்கை பற்றி யூனியன் உணவு மந்திரி திருப்தி யடைந்திருப்பதாகவும் இயன்ற அளவு உதவி புரிய அவர் முயலக் கூடும் என்ற எண்ணம் தமக்கு ஏற்பட்டிருப்பதாகவும் மதியழகன் நிருபர்களிடம் கூறினுர்.

மாநிலத்துக்கு அதிக கோதுமை ஒதுக்கப்படும் என்று உறுதி அளிக்கப்பட்டதாகச் சொன்னுர். வறட்சி நிலைமை காரணமாக கோதுமையைக் குறைந்த விலையில் விற்பதற்கு மானிய உதவி தரவேண்டும் என்ற கோரிக்கை மேலும் பரிசீலிக்கப் படலாம்.

தமிழ்நாட்டில் உள்ள பஞ்சாலைகளின் பிரச்னைகள் பற்றியும் தேசாயுடன் மதியழகன் விவாதித்தார். சில வகை நூலுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டும் என்று கோரினுர்.

## பதவிஉயர்வு பெறவிருந்தவர் காலமானுர்

சுழிபுரம், ஞாயிறு
நாளை மறுதினம் பதவி உயர்வு பெறவிருந்த இன்ஜினியர் ஒருவர் திடீரென காலமானுர்.

சுழிபுரத்தைச் சேர்ந்த நீர்ப்பாசன இலாகா பொறியியலாளர் எஸ்.பெரியதம்பி என்பவரே மரணமானவராவார்.

நாளைமறுதினம் நீர்ப்பாசன இலாகா அதிபராகபதவி உயர்வுபெறவிருந்த இவர் நேற்று இரவு திடீர் என

## திரு. சுப்பிரமண்யம் அறிக்கை

புதுடில்லி, ஏப். 6

திராவிட முன்னேற்றக் கழகப் மீது பொதுமக்கள் கொண்டிருந்த மயக்கம் இப்பொழுது தெளிந்து கொண்டிருக்கிறது என்று திரு. சி. சுப்பிரமணியம் காங்கிரஸ் காரியக்கமிட்டியிடம் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் உள்ள அரசியல் நிலைமைபற்றி விளக்கிய திரு. சி சுப்பிரமணியம் தமிழ்நாட்டு மக்கள் தி மு. க ஆட்சிமீதுகொண்டிருந்த மோகத்தை இழந்து வருகிறார்கள். இதற்குக் காரணம் தி. மு க வினர் மக்களுக்குக் கொடுத்த பிரமாதமான வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமலிருப்பதுதான் என்றார்.

சென்னை மாநகரசபை தேர்தலின்போது தமிழ்நாட்டில் தி. மு. க. செல்வாக்கு இழந்துவருவது அறியக்கூடியதாகவும், இந்த அறிகுறி நாகர்கோயிலில் திரு. காமராஜ் வெற்றி பெற்றதின்மூலம் மேலும் உறுதியாயிற்று என்றும் திரு. சுப்பிரமணியம் கூறினார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி மக்களைத் தன்பக்கம் வைத்திருப்பதற்கான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

வேண்டுமென்றும், தொகுதிகளின் தீவிர மெம்பர்களுடைய கருத்துக்களையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும் சிரமைப்புக் கமிட்டி சிபார்சு செய்துள்ளது.

காங்கிரஸ் ஸ்தாபனத்தை பலப்படுத்தவும், திறமையாகச் செயல்படச்செய்யவும், காங்கிரஸ் அக்கிராசனர் இந்தக் கமிட்டியை நியமித்திருந்தார்.

சோதனை ஏற்பட்டுள்ளதாகவும், காங்கிரஸ் ஊழியர்களிடையே பதற்றநிலை ஏற்பட்டிருப்பதாகவும், திட்டவட்டமான சமூக லட்சியங்களை நிறைவேற்றுவதற்குப் பாடுபடவேண்டும் என்றும் இல்லாவிட்டால் ஸ்தாபன அமைப்பில் செய்யப்படும் மாறுதல்களால் மாத்திரம் பிரயோசனம் இல்லையென்றும் கமிட்டி கருத்துத் தெரிவித்துள்ளது.

டத்தில் கடந்த ஜனவரி மாதம் முதல் நடைபெற்றுக் கொண்டிருந்த வேலை நிறுத்தம் முடிவடைந்துள்ளது. தொழில் தகராறு நீதிமன்றம் மூலம் தொழிலாளர்களின்கோரிக்கைதீர்த்துவைக்கப்படும் என்று உறுதியளித்ததைத் தொடர்ந்து 80 நாட்கள் வரை நடைபெற்ற இந்த வேலைநிறுத்தம் நிறுத்தப்பட்டது.

இருதயம் பொருத்தப்பட்ட 47 வயதான இருதய நோயாளி கண்விழித்துக் கொண்டு உஷாராக இருப்பதாக டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். அவர் நிலைமை திருப்திகரமாய் இருக்கின்றதாம். இந்த இருதயம் ஆர்ஜன்டைனு டாக்டர் ஒருவரினுல் 9 வருட ஆராய்ச்சியின் பின் உருவாக்கப்பட்டது சாதாரணமான இருதயத்தின் அளவிலான இந்த செயற்கைஇருதயம் பிளாஸ்டிக்கினுல் ஆனது. இதை உருவாக்குவதற்கு 5 ஆயிரம் டாலர் செலவாகியுள்ளதாம் பொருத்தமான இயற்கை இருதயம் ஒன்று கிடைத்த பின்னர் செயற்கை இருதயம் நீக்கப்பட்டுவிடும்

தேசாயுடனும், திட்டக் கமிஷன் உப தலைவர் திரு. டி. ஆர். தாட்கிலுடனும் நடத்திய பேச்சுவார்த்தைகளில் கடன் தவணைகளை மாற்றியமைக்கும் பிரச்னையை நிதியமைச்சர் மதியழகன் கிளப்பினுர். குறியபாக, பழையசென்னை மாநிலத்தில் இருந்த ராயல் சீமைப் பகுதியில் (இப்போது ஆந்திராவில் இருக்கிறது) நிவா

காலமாஞர்.

சுழிபுரத்தைச் சேர்ந்த நீர்ப்பாசன இலாகா பொறியியலாளர் எஸ்.பெரியதம்பி என்பவரே மரணமானவராவார்.

நாளைமறுதினம் நீர்ப்பாசன இலாகா அதிபராகபதவி உயர்வுபெறவிருந்த இவர் நேற்று இரவு திடீர் என மாரடைப்பால் காலமாஞர்.

# பூரி ஆச்சாரியார் கூற்றுப் பற்றி விசாரிக்கக் கோரிக்கை

## பட்ஞவில் மனுதாக்கல்

பட்ஞ, ஏப்ரல் 6

பூரி சங்கராச்சாரியார் தீண்டாமை குறித்து வெளியிட்ட கருத்துக்கள் பற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும்படி கோரி பட்ஞவில் மனுவொன்று தாக்கல்செய்யப்பட்டுள்ளது. சமாஜவாதியுக சபாவினுல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி முதல் பிரிவு மாஜிஸ்டிரேட் ஒருவர் கேட்கப்பட்டுள்ளார்

### கொடும்பாவி கொளுத்தினர்

தமிழ்நாட்டில் பூரி சங்கராச்சாரியாரின் கொடும்பாவி கொளுத்தப்பட்டது.

சிதம்பரத்தைச் சேர்ந்த மாணவர்கள் இதைக் கொளுத்தினர்கள்.

பூரி சங்கராச்சாரியார் தீண்டாமையை ஆதரித்துப் பேசியதும், இதைத் தொடர்ந்து அவருக்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பியிருக்கின்றது.

சிதம்பரம் நந்தனுர் அரசினர் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் பூரி சங்கராச்சாரியாருக்குக் கொடும்பாவி கட்டி எரித்தார்கள்.

கொடும்பாவியை அவர்கள் முக்கிய வீதிகளின் வழியாக இழுத்துச் சென்றார்கள். அப்போது 'சங்கராச்சாரியார் ஒழிக' என்று கோஷம் போட்டார்கள்.

### 'மதவிரோதி'

பூரி சங்கராச்சாரியார் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடியாவிட்டால் அவரை மத விரோதி என்று அறிவிக்கவேண்டும் என்று இந்து சங்கத்துக்கு ஓரிசா பழைய முதல் மந்திரி அரிகிருஷ்ண மகதாப் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

இதுபற்றி மகதாப் ஒரு பத்திரிகையில் எழுதியிருப்பதாவது:-

பூரி மடாலயத்துக்கு அதிபதியாக இருக்க, சங்கராச்சாரியாருக்குத் தகுதியில்லை. வகுப்புவாதம், தீண்டாமை இல்லாத மதம் இந்துமதம் தான். எனவே சங்கராச்சாரியார் போன்றவர்கள் மதத்துக்கு விரோதமாகத் தீண்டாமை, சாதி உணர்ச்சி ஆகியவற்றைப் பேசினுல் அவரை இந்து சமுதாயமே தள்ளிவைத்துவிடவேண்டும்

# உள்ளூர் படங்களுக்கு சிறிமாவின் ஆதரவு

கொழும்பு, ஞாயிறு.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பதவிக்கு வந்தால் சுதேசிய சித்திரபட்டி ஆராக்ஷய மண்டலயவின் கோரிக்கைகளை நிறைவேற்றிவைக்கும்.

உள்நாட்டு சினிமா உற்பத்திக்கு ஆக்கமளிக்கும்படி இந்த மண்டலய அண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் திருமதி பண்டாரநாயகாவிடம் சமர்ப்பித்த மகஜருக்கு திருமதி பண்டாரநாயகா அனுப்பியுள்ள பதிலில் மேற்கண்ட வாக்குறுதியை அளித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பதவிக்கு வந்தவுடன் மண்டலயவின் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்போம். அது எங்கள் கடமை முன்னர் பதவியிலிருந்தபொழுதும் இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றி வைக்கவே முயற்சி செய்தோம் ஆனுல் அதற்கு முன்னரே எமது ஆட்சி வீழ்த்தப்பட்டு விட்டது என்று திருமதி பண்டாரநாயகா தெரிவித்துள்ளார்

உள்ளூர் படங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும்படியும் உதவிகள் வழங்கும்படியும் இந்த மண்டலய கேட்கின்றது.

## விமான வேலைநிறுத்தம் வாபஸ்

லண்டன், ஏப்ரல் 6

பிரிட்டிஷ் ஓவர்ஸீஸ் எயார்வேஸ் கோப்பரேஷன் விமானச் சேவையைச் சேர்ந்த விமானிகள் கடந்த ஆறுதினங்களாக நடத்தி வந்த வேலைநிறுத்தம் முடிவடைந்துள்ளது.

விமானிகளின் தலைவர்களுக்கும் பி. ஓ. ஏ. சி. ஸ்தாபனத்துக்குமிடையில் ஏற்பட்ட உடன்பாட்டைத் தொடர்ந்து வேலைநிறுத்தம் வாபஸ்பெறப்பட்டது. ஒப்பந்தத்தின் விபரங்கள் பற்றி அரசாங்கத்துடன் ஆலோசனைகள் நடத்தப்படும் என்று தெரிகின்றது.

## துப்பாக்கிமுனையில் 6 பேர் கைது

கோட்டை, ஞாயிறு

இலங்கைப் போக்குவரத்துச்சபையின் வெரஹெரடிப்போவில் நடைபெறவிருந்த திருட்டு முயற்சியொன்று முறியடிக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. இதுசம்பந்தமாக துப்பாக்கி முனையில் 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

ஒரு சுரங்கத்துக்கூடாக களவாடப்பட்ட சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான உதிரிப்பாகங்களை திருடர்கள் கடத்த முயலுகையில் கைது செய்யப்பட்டார்கள். இ. போ. ச. காவலாளிகளிடமிருந்த துப்பாக்கிகளின் உதவியுடன் 6 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

## நீரா அருந்தி 13 பேர் பலி

கர்நூல், ஏப். 6

கர்நூல் மாவட்டத்தில் ஏமிங்கனூர் தாலூகாவில் காச்சாபுரம், நாராயணபுரம் என்ற இரண்டு கிராமங்களில் மார்ச் 31-ந் தேதியன்று நீரா அருந்தியபின் 13 பேர் மாண்டனர் என்று அங்கு சென்று பூர்வாங்க விசாரணைகள் நடத்திவிட்டுத் திரும்பிய வைத்திய-பொலிஸ் அதிகாரிகள் கூறினர்.

ஒரு நீரா கண்ட்ராக்டர் வீட்டிலிருந்து 'குளோரால் ஹைட்ரேட்' என்று பெயர் சீட்டு ஒட்டப்பட்ட மூன்று புட்டிகளை பொலிஸார் கைப்பற்றினர். இரண்டு புட்டிகள் காலியாக இருந்தன. ஒன்றில் ஏதோ பச்சை நிறத் திரவம் இருந்தது.

இதுசம்பந்தமாக இதுவரை யாரும் கைதுசெய்யப்படவில்லை. மேற்கொண்டு புலன் விசாரணை நடந்து வருகிறது.

இறந்த 13 பேரில் ஆறு பேர் அதோனி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபின் மரணமடைந்தனர்.

## பிணையில்வாலிபர் செல்ல அனுமதி

யாழ்ப்பாணம், திங்கள்

தனதுகாதலியிடம்சென்ற வாலிபர் ஒருவர் காதலியின் பெற்றோரிடம் அகப்பட்டுக் கொண்டார். இச்சம்பவம் அண்மையில் யாழ்ப்பாணம் பலாலி வீதியிலுள்ள ஒரு வீட்டில் நடைபெற்றுள்ளது

நடுநிசியில் காதலியுடன் உரையாடிக்கொண்டிருந்த குறிப்பிட்ட வாலிபரை எட்டிப்பிடித்துக்கொண்ட பெற்ரோர் தங்கள் மகளின் முன்னிலையில் அவரை என்ன செய்வதென்றறியாது திகைத்தனர். இறுதியில் பொலிசாரிடம்ஒப்படைக்கப்பட்ட வாலிபரை பொலிசார்பிணையில் செல்ல அனுமதித்தனர்

# 'முன்னைய அரசாங்கங்கள் நாட்டு வளர்ச்சிக்கு உதவின'

கொலஞவ, ஞாயிறு

''இரு பண்டாரநாயக்கா அரசாங்கங்களும் தனதாட்சிக்காலத்தில் ஏறக்குறைய 400 கைத்தொழில் நிலையங்களையும் அரசாங்கம் ஆதரவு பெற்ற கூட்டுஸ்தானங்களையும் சோஷலிச நாடுகளின் உதவியோடு நிறுவியுள்ளன. நாட்டில் உள்ள உருக்கு 'ரயர்' சீமெந்து தொழிற்சாலைத் திட்டங்கள் யாவும் பண்டாரநாயக்கா ஆட்சிக்காலத்தில் மேற்கொண்ட சிறந்த வெளிநாட்டுக்கொள்கையின் பலாபலன்களேயாகும்''

அண்மையில் மின்னேரியாவில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய கோட்டை ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு. ஸ்ரான்லி திலகரத்ஞ மேற்கண்டவாறு கூறினுர். அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

இன்று தேசிய அரசாங்கம் சோஷலிச அரசாங்கங்கள் ஆரம்பித்துவைத்த வேலைகளின் நன்மைகளை அறுவடை செய்கிறது. இந்த கைத்தொழில் ஸ்தாபனங்களின் திறப்புவிழாக்களைக் கொண்டாடுவதிலும் கூட்டுஸ்தாபனங்களின் நிர்வாக விசேடங்களைக் கொண்டாடுவதிலுமே நேரத்தைச் செலவிடுகிறது. நாட்டின் செல்வத்தை விருத்திசெய்ய திரு. ரி பி. இலங்கரத்திஞ போன்ற முன்னைய அரசாங்கங்களின்மந்திரிகளே தேசியமயத்தை ஆரம்பித்து வைத்து விருத்தி செய்துள்ளனர். ஆனுல் இன்றைய முதலாளித்துவ அரசாங்கமோ தான் கொடுத்தவாக்குறுதிகளை நிறைவேற்றவுமில்லை. மக்களின் தற்போதைய பிரச்னைகளைத் தீர்க்கவுமில்லை.

கைத்தொழில் அபிவிருத்தியும், தேசியமயசேவையுமே நாட்டின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க அரசாங்கத்துக்கு உதவிசெய்யும் என்று கூறிய அவர் அரசாங்கம் இவைகளில் முயற்சியெடாது வேலையில்லாப்பிரச்சினையை மேலும் வளரவிட்டுள்ளது. என்றும் 110 டாக்டர்கள் உட்பட 2 லட்சம்பேர் வேலையில்லாது இருக்கின்றனர். என்றும் கூறினுர்.


கப்ஸ்டன் சிகரெட்டுகளை வாங்குங்கள்




அவை நல்ல புகையிலைக் கலவை கொண்டவை

சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்



S. R. S.

ஜவுளி மாளிகையில் புத்தாண்டு

மலிவு விற்பனை

நடைபெறுகிறது!

உங்கள் ஜவுளி தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள முந்துங்கள்
வியாபாரிகளுக்கும் கூட்டுறவு சங்கங்களுக்கும் விசேஷ கழிவுகள் உண்டு.

எஸ். ஆர். செல்லத்துரை

216, கே. கே. எஸ். ரோட் — யாழ்ப்பாணம்.
போன்: 296


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தேசங்கள் பரஸ்பரம் ஒன்றையொன்று சுரண்டுவதை நிறுத்தினுலொழிய உண்மையான ஆயுத ஒழிப்பு நடைபெருது. — மகாத்மாகாந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், கீலக வருஷம் மாசிமாதம் 25-ந்திகதி (7-4-69)


## தமிழரசு மகநாடு

அகில இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பதினேராவது மாநில மகாநாடு இன்று உடுவிலில் ஆரம்பமாகிறது. வழமைபோல் பல நிகழ்ச்சிகளும் இடம்பெற்று மூன்றும் நாள் மாலை யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நடைபெறும் பொதுக் கூட்டத்துடன் முடிவடையவிருக்கிறது. தமிழ் அரசுக்கட்சி ஓர் அரசியல் ஸ்தாபனம். இந்த நாட்டில் வாழும் தமிழ்பேசும் மக்கள் சுதந்திரமாகவும் இதர மக்களுடன் சமத்துவமாகவும் சகல உரிமைகளுடனும் வாழவேண்டுமென்பது இந்தக் கட்சியின் இலட்சியமும் கொள்கையுமாகும். 1949-ம் ஆண்டில் உருவான தமிழ் அரசுக்கட்சியின் இலட்சியமும் கொள்கையும் தூய்மையானதென்பதிலும் நல்ல நோக்கத்தையுடையதென்பதிலும் யாருக்கும் சந்தேகமிருக்கமுடியாது. இதேபோல் தமிழ் மக்கள் சமஉரிமையுடனும் சுதந்திரத்துடனும் வாழவேண்டுமென்ற இலட்சியமும் கொள்கையுமுடைய தமிழ்க்காங்கிரஸும் மற்றும் தமிழ்க் கட்சிகளும் இந்த நோக்கங்களைக் கொண்ட தமிழ்த் தலைவர்களும் உள்ளனர். இந்தக்கட்சிகளினதும் தலைவர்களினதும் கொள்கைகளும் இலட்சியங்களும் ஒன்றுக இருப்பினும் அவற்றை அடைவதற்கான மார்க்கங்களில் வேறுபாடு உண்டு. இலட்சியமும் கொள்கையும்நேர்மையானதாகவும் தூய்மையானதாகவும் இருந்தாலும் அவற்றை அடைவதற்காக எடுக்கப்பட்ட வழிவகைகள் இதுவரை பயனளித்துள்ளனவா? இனியும் இதே வழியில் சென்ருல் எதிர்பார்த்த பயன்கிடைக்குமா? வேறு மார்க்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமா? இந்தக் கேள்விகள் தமிழ் அரசுக்கட்சியினர் மட்டுமல்லாது தமிழ் மக்களின் உரிமைகளைப் பேணிப் அதேயளவு நம்பிக்கை 1956-ம் ஆண்டிலும் 1960-ம் ஆண்டிலும் தமிழ் அரசுக் கட்சியில்வைத்தார்கள் அந்த நம்பிக்கையை 1965-ம் ஆண்டிலும்பொதுமக்கள் இழந்துவிடவில்லை. இதேபோல் 1956-ம் ஆண்டிலும் 1965-ம் ஆண்டிலும் தமிழ்க் காங்கிரஸின் மீதும் தமிழ் மக்கள் தங்கள் நம்பிக்கையைத்தெரிவித்தனர். அதாவது தமிழ் அரசுக்கட்சி மட்டுமோ, தமிழ்க் காங்கிரஸ்கட்சி மட்டுமோ தனித்தனியாக இயங்கினுலும் தமிழ்மக்கள் தங்கள் உரிமைகளைப் பெறுவதற்கும் சுதந்திரமாக வாழ்வதற்கும் இருபெரும் தமிழ்க்கட்சிகளின்மீதுமே நம்பிக்கைதெரிவித்துவந்திருக்கின்றனர்,

ஆனுல் இரு கட்சிகளின் தலைவர்களும் ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கை வைக்கவில்லையென்பதுபரமரகசியம்,

இதன் விளைவுதான் தமிழ் மக்களுக்கிருந்த உரிமைகளையும் படிப்படியாக இழந்துவருவதற்கு முக்கிய காரணம் இரண்டு கட்சிகளின் இலட்சியமும் கொள்கையும் பெரிதாக இருப்பினும் அவற்றை அடைவதற்கு இதுவரை அவை கடைப்பிடித்த மார்க்கங்கள் சரியாக வெற்றிபெற முடியவில்லை. இரு கட்சிகளும் ஒரே லட்சியத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பினும் தங்களுக்குள் வேற்றுமையை வளர்த்து எதிலும் வேறுபாடுகொண்டிருந்தாலும் அவற்றில் வெற்றியீட்டமுடியாது போய் விட்டதென்பதும் உண்மை.

இந்நிலையில் தமிழ்அரசுக் கட்சியின் மகாநாடு, கடந்த காலத்தில் பல வழிமுறைகளைக் கையாண்டபின்னர், தமிழ்மக்களின் உரிமைகளைப் பெறுவதற்குப் புதிய மார்க்கத்தை, புதிய திருப்பத்தை ஏற்படுத்தவேண்டுமென்ற நோக்கத்துடன் இன்று கூடுகிறது. பல சோதனைகளுக்குள்ளான

# ஈழத்தில் சைவநெறி விளக்கும் சைவப்புலவர் திருக்கூட்டம்

## 'கொழும்பில் நாளை நடக்கும் பட்டமளிப்பும் மாநாடும்

— பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி —

இம்மாதம் எட்டாம் ஒன்பதாந் திகதிகளில் சைவப்புலவர்கள் மகாநாடும் பட்டமளிப்பும் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில நடைபெற இருக்கிறது. சைவப்புலவர்கள் கடந்த ஒன்பது வருடங்களாக ஈழநாட்டில் பல சமயவேலைகளை ஆக்கப் பணிகளாகச் செய்துள்ளனர். ஊர்கள் தோறும் சென்று சமயச் சொற்பொழிவுகள் செய்தலும் சென்னை சைவசித்தாந்த சமாஜத்தாரால் ஆண்டுதோறும் சைவப்புலவர், இளம் சைவப்புலவர் பரீட்சை நடத்தலும், சைவசித்தாந்த நூல்களுக்கான உரைகளை எழுதி வெளியிடலும் சைவநாடகப்போட்டிகள் வைத்துப் பரிசுகள் வழங்கலும் நாவலர்பெருமானுடைய நினைவுதினத்தைப் பெருவிழாவாக வருடாவருடம் நடத்திவருதலும் இச் சங்கம் செய்யும் குறிப்பிட்ட தொண்டுகளாகும்.

சைவசித்தாந்த நெறியில் நின்று சமயத்தை வளர்க்கவே சைவப்புலவர்கள் மேற்கொண்ட குறிக்கோளாகும். இவர்கள் அனைவரும் சென்னை சைவசித்தாந்த மகாசமாஜத்தினரால் நடத்தப்பட்ட சைவப்புலவர் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள். ஐம்பதுக்கு மேற்பட்டோர் இக் குழுவில் அங்கம்வகிக்கின்றனர்.

### சென்னை மகாசமாஜம்

சைவசித்தாந்த மகாசமாஜத்தினர் அறுபதாவது ஆண்டுவிழாவைச் சிதம்பரத்தில் கொண்டாடியபோது சைவப்புலவர் சங்க உறுப்பினர் பலர் அங்கே அழைக்கப்பட்டனர். அங்கு நடைபெற்ற கருத்தரங்குகளிலும் சொற்பொழிவுகளிலும் மாதர் மகாநாட்டிலும் இவர்கள் கலந்துகொண்டு சொற்பெருக்காற்றிப் பெருஞ்சிறப்புப் பெற்றனர். பரீட்சையிற் சித்தியடைந்த சைவப்புலவர்களுக்கு அங்குவைத்து உயர்திரு கிருபானந்தவாரியாரால் பட்டம் வழங்கப்பட்டது. சிதம்பரம், நாவலர் வித்தியாசாலை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகிய இடங்களிலும் இவர்கள் சென்று சொற்பொழிவு செய்து பாராட்டைப் பெற்றனர்.

### மகாநாடுகள்

கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் கண்டியிலும் மகாநாடுகள் நடத்திப் பெருமளவில் பயன் அளித்துள்ளனர். உயர்திரு கி. வா. ஜெகந்நாதனே கண்டியில் நடைபெற்ற மகாநாட்டுக்குத் தலைமைதாங்கினுர். இன்னும் மட்டக்களப்பில் சைவப்பெரியார் அருணசலதேசிகரும் யாழ்ப்பாண மகாநாட்டில் சைவப்புலவர் உயர்திரு த. குமாரசாமிப்புலவரும், பேராசிரியரும் இருந்து சிறப்பித்தனர். அவர்கள் தாம்பெற்ற சிவ அனுபவத்தின் மூலம காட்டுகின்ற சீரியவழியிலேயே சைவப் புலவர்கள் வழிநடத்தப்படுகின்றனர்.

### நாவலருக்கு விழா

கடந்த நூற்றுண்டில் யாழ்ப்பாணத்தில் தோன்றி சைவத்தையும் தமிழையும் வளர்த்த பெருமகனுர் நாவலர் பெருமான். நாவலர் பெருமானைப் போற்றவேண்டியது சைவப்புலவர்களின் கடமையாகும், இதை எண்ணிப் பதுளையிலும்திருக்கேதீஸ்வரத்திலும், யாழ்ப்பாணத்திலும் நாவலர்பெருமானின் திருவுருவப் படத்தை ஊர்வலம்செய்து பெருவிழாவாக எடுத்தமை யாவரும் அறிந்ததே. நாவலர் அடிச்சுவட்டைப் பின்பற்றியே சைவப்பணியை இவர்கள் ஆற்றிவருகிருர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இம்மாதம் எட்டாம், ஒன்பதாம் திகதிகளில் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறப்போகும் மகாநாடு பெருமளவில் சிறப்புடையதாக அமைந்து விளங்கும் என்பதற்குச் சந்தேகமேயில்லை. சைவப் புலவர் பரீட்சையில் சித்தியடைந்தோருக்குப் பட்டமளிப்பும், புலவர் கருணலய பாண்டியனுருக்கு பாராட்டு வைபவமும் நாடகப்போட்டியில் வெற்றியீட்டியோருக்கு பதக்கம் சூட்டிக்கௌரவித்தலும் மகாநாட்டின் முக்கியநிகழ்சிகளாக இடம்பெறும். அத்துடன் முதற்பரிசுபெற்ற யூனியன் கல்லூரித் தமிழ் மன்றத்தினரின் நாடகம் மேடையேற்றிக் காண்பிக்கப்படும். இன்னும் கருத்தரங்கம், சொற்பொழிவுகள், திருமுறைக்கச்சேரி சமயநாடகம் முதலியனவும் இம் மகாநாட்டில் நடைபெறும்.

ஈழநாட்டில் சைவப் புலவர்களின் கூட்டம் உண்மையிலேயே சைவநெறியை விளக்கும் திருக்கூட்டமாக அமைந்திருக்கிறது என்ருல் அதில்மிகையொன்றுமில்லை.

''மேன்மைகொள் சைவ
நீதி விளங்குக
உலகமெல்லாம்''.

# நைஷ்டிகப்பிரமச்சாரி சுவாமி நாகலிங்கப்பரதேசியார்

— பி சந்திரசேகரம் —

ஞம் தினமும் பாடுகிறீர்கள்! பைநிறைய காசுகளைக்

## உணவு உற்பத்தி ஆலோசனைக் கூட்டம்

உடுப்பிட்டி, ஞாயிறு

கரணவாய் தெற்கு சிரமதான இயக்க, உணவு உற்பத்தி ஆலோசனைக் கூட்டம் கரணவாய் தெற்குக் கிராம சேவையாளர் திரு. கே. வேலாயுதபிள்ளை தலைமையில் கப்பூது வாசிகசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மூன்று மைல் நீளமுள்ள கப்பூது உயிலங்கண்டுவீதியைச் சிரமதானம் மூலம் திருத்துவதெனவும், உணவு உற்பத்தித்துறையில் விவசாயிகளை ஊக்குவிக்கும்முகமாக விவசாயப் போட்டிகளை நடாத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஆசிரியர் திரு. தில்லையம்பலம் சிரமதானம், விவசாயப் போட்டிகள் பற்றி விளககிப் பேசினுர். கரணவாய் தெற்கு சிரமதானக் குழு நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வ. கதிரித்தம்பி, உபதலைவர்: திரு பி. சே. குலசிங்கம் (உடுப்பிட்டி கி. ச. உபதலைவர்), காரியதரிசி: திரு. க. சின்னத்தம்பி, உபகாரியதரிசி: திரு. க கந்தையா, தனுதிகாரி: திரு. சி. செல்லையா.

திருவாளர்கள் க. தியாகராசா, வ. செல்லையா, ப. முருகேசு. அ செல்லையா, சி. செல்லையா ஆகியோரடங்கிய நிர்வாக சபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது

கரணவாய் தெற்கு கப்பூதுஅந்தணத்திடல் உணவு உற்பத்திக் குழுத்தலைவராகக் கிராம சேவையாளர் திரு. க. வேலாயுதபிள்ளையும், காரியதரிசியாகத் திரு. க. தியாகராஜாவும், ஐவர் அடங்கிய நிர்வாக சபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

......

## பரிசு பெற்ற நாடகங்கள்

யாழ்ப்பாணம், திங்.

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தினரின் ஆதரவில் நடைபெற்ற சமய நாடகப் போட்டியில் முதலிடம் பெற்ற தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் அருளும் மருளும் என்ற நாடகமும் இரண்டாம் பரிசு பெற்ற காங்கேசன்துறை இளந் தமிழர் மன்றத்தினரின் 'சிதம்பர தரிசனம்' என்ற நாடகமும் நாளை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. சைவப் புலவர் சங்க ஆதரவில் சைவப்புலவர்மாநாடும்

## நாட்டிலும் நகரிலும்

பங்குனி மாசத்தில் பசும் மழை பெய்வது அபூர்வம் தான். ஆனுலும் அதனுல் நன்மையுமுண்டுதீமையுமுண்டு. எள்ளு, பயறு, சணல், கடலை முதலிய சிறுதானியம் விதைத்தவர்கள் அதைக் களிப்புடன் வரவேற்பார்கள். பொதுவாக மழை பெய்வதை யார்தான் விரும்பமாட்டார்கள்? மரம் செடிகள் மட்டுமன்றி ஐப்பசி மாதத்துக்குப் பிறகு வறண்டு இருண்டுபோயிருக்கும் மனிதர்களுக்கே அந்த மழை ஒரு தேவதருவாக, காமதேனுவாக. குளிர்ச்சியையும் சுகத்தையும் தரக்கூடியதாயிருக்கிறது.

நேற்று முன்தினம் காலையிலும் இரவிலும் பெய்த மழையை யாழ்ப்பாணத்தில் வரவேற்காதவர்கள் இல்லை. குடிநீர் கலன் ஒன்று இருபத்தைந்து சதத்திற்கு விற்கும் இந்நாட்களில் வானத்திலிருந்து வருணன் கொடுக்கும் இந்த அமிர்த வர்ஷத்தை யார்தான் வரவேற்க மறுப்பார்கள். சிறுதானியம் விதைந்தவர்களுக்கு இந்த மழை ஒரு தெய்வீக வரப்பிரசாதம். இது இல்லாவிட்டால் எள்ளுப் பயிர் வாடி வதங்கி அகால நேரத்தில் பூத்து மடிந்துவிடும்.

பெய்த மழை நன்ருகப் பெய்யவில்லையே என்று பலர் குறை சொல்லுவார்கள். ஏனென்ருல் இத்தனை நாட்களாக எறித்த கடுமையான வெய்யிலில் காய்ந்து கருவாடாய்ப்போயிருக்கும். நிலத்தில் சிறு மழைத்துமி பட்டவுடனே நிலத்திலுள்ள சூடு கிளம்பிவிடுகிறது. இது மனிதரையும், மாடுகளையும், கோழிகளையும் தாக்கிவிடும். தரைக்கு மிக சமீபமாக உலவித்திரியும் ஆடு, கோழி. முதலியன இந்த வெப்பத்தால் தாக்கப்பட்டு பலவித நோய் நொய்களுக்கு ஆளாகின்றன. கோழிப்பண்ணை செய்பவர்கள் இந்த மழையை விரும்பமாட்டார்கள். இதனுல் கோழிகளுக்கு ஆபத்தேயன்றி நன்மை கிடையாது. கோழிகளுக்கு ஏற்படும் வருத்தங்கள் பெரும்பாலும் இப்படியான உஷ்ணக் கொதிப்பாலேயே உண்டாகின்றன. இந்தநாட்களில் கோழிகளை மிகவும் ஜாக்கிரதையாக வளர்க்க வேண்டும். குளிர்ந்த சோலைகளில் அவை நடமாடவேண்டும். போதிய சுத்தமான தண்ணீர் இருக்க வேண்டும். கூடுகளில் வளர்க்கப்படும் கோழிகளுக்கும் இப்படியே வது நிச்சயம.

0 0 0

பொதுவாக உலகத்திலே எங்களுக்குத்தான் பெரிய கஷ்டம், எங்களைத்தான் கடவுள் சோதனை செய்கிருர். நாங்கள்தான் அவலப்படப் பிறந்தவர்கள் என்று எல்லோரும் நினைத்துக் கொள்ளுவதுசகஜம். ஆனுல் இன்னெருவர் எங்களைவிடக் கூடிய கஷ்டத்தை அனுபவிக்கும்போது அவருடைய நிலையோடு நம்மையும் ஒப்பிட்டுப் பார்த்து எங்களை சமாதானப் படுத்திக்கொள்ளுகிறும்.

கொழும்புக்குப் போய் விட்டுத் திரும்பிய ஓர் அன்பர் தமது அனுபவத்தைக் கூறினுர். அங்கே இரண்டு நாட்கள் தங்கியிருந்ததே பெரும் சங்கடமாய்ப்போய் விட்டதென்ருர் அவர். மழை கிடையாது, வெய்யில் கொளுத்துகிறது, போதாக்குறைக்கு மின்சார வெட்டினுல் விசிறிகளுமில்லை குளிர் அறைகளுமில்லை, ஒரே புழுக்கம், ஒரே வியர்வை, திரும்பி வந்துவிட்டார்.

இங்கிருப்பது போலவே தமிழ்நாட்டிலும் கொடிய வறட்சி இப்பொழுது நிலவுகின்றது. பயிர்களுக்குப் பாய்ச்சுவதற்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. இதன் பலனுகச் சுமார் பத்து லட்சம் பேர்களுக்கு வேலை எதுவுமே இல்லாமல் போய்விட்டது. தமிழகத்திலுள்ள பதினுன்கு மாவட்டங்களில் ஒன்றைத் தவிர மற்றவை எல்லாம் தண்ணீர் இன்மையால் பாதிக்கப்பட்டுள்ளன. மதுரை, கோயம்புத்தூர், போன்ற பெரிய நகரங்களில் குடிநீா ரேஷன்செய்யப்பட்டுள்ளது.

இதன் பலனுகத் தமிழ்நாட்டுக்கு சுமார் 41 கோடி ரூபாய் உதவிப் பணம் தேவைப்படும் என்று தமிழக முதலமைச்சர் மத்திய அரசிடம் விண்ணப்பம் செய்துள்ளார்.

இலங்கையில் இம்முறை மாரிமழை குறைந்தது யாவரும் அறிந்ததே. கோடை மழையும் இல்லாவிட்டால் இங்குள்ளவர்கள் பாடு மிகவும் திண்டாட்டமாய்த் தான் போய்விடும்.

எம்மைவிடக் கஷ்டப்படுகிறவர்களும் இருக்கிருர்கள் என்ற நினைவில் மனத்தை ஆறுதல்படுத்தவேண்டியதே ஒழிய வேருென்றும் செய்வதற்கில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக எடுக்கப்பட்ட வழிவகை கள் இதுவரை பயனளித்துள் ளனவா? இனியும் இதே வழி யில் சென்ருல் எதிர்பார்த்த பயன்கிடைக்குமா? வேறு மார்க்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமா? இந்தக் கேள்வி கள் தமிழ் அரசுக்கட்சியினர் மட்டுமல்லாது தமிழ் மக்க ளின் உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதையே இலட்சிய மாகவும் நோக்கமாகவும் கொண்டுள்ளகட்சிகளும் தலை வர்களும் ஆராய்ந்து சிந்தித்து முடிவுகாணவேண்டிய விஷயம். இலங்கை 1948-ம் ஆண்டில் அரசியல் விடுதலை பெற்ற காலத்திலிருந்து நடந்துவந்துள்ள சம்பவங்களையும் இவை சம்பந்தமாக தமிழ்த்தலைவர்களும் கட்சிகளும் எடுத்துவந்துள்ள நடவடிக்கைகளையும் ஆத்ம சோதனை செய்து கொள்ளவேண்டிய நேரமும் இதுவே. 1947-ம் ஆண்டில் தமிழ்க்காங்கிரஸ் மீது தமிழ்ப்பேசும்மக்கள்எவ்வளவு தூரம் அதிக நம்பிக்கை வைத்தார்களோ கட்சியின் மகாநாடு, கடந்த காலத்தில் பல வழிமுறைகளைக் கையாண்டபின்னர், தமிழ்மக்களின் உரிமைகளைப் பெறுவதற்குப் புதிய மார்க்கத்தை, புதிய திருப்பத்தை ஏற்படுத்தவேண்டுமென்ற நோக்கத்துடன் இன்று கூடுகிறது. பல சோதனைகளுக்குள்ளான தமிழரசுக்கட்சி பல போராட்டங்களையும் நடத்தி அனுபவம்பெற்றிருக்கிறது. கடந்த கால அனுபவங்கள் அதற்கு நல்வழிகாட்ட உதவவேண்டும். தமிழ்மக்கள் அனைவரினதும் ஒத்துழைப்பும் ஆதரவும் அந்தக் கட்சிக்குத் தேவை. தமிழ் மக்களின் கஷ்ட நஷ்டங்களும் பிரச்னைகளும் கட்சிப் பிரச்னைகளல்லவென்பதையும் தமிழ் அரசுக்கட்சியும் தமிழ்க்காங்கிரஸ் கட்சியும் மட்டுமல்லாது இதர கட்சிகளின் தலைவர்களும் பொது மக்களும்கூட உணர்ந்து கொள்ளவேண்டும்.

# நைஷ்டிகப்பிரமச்சாரி சுவாமி நாகலிங்கப்பரதேசியார்

— பி சந்திரசேகரம் —

நாகலிங்கப்பரதேசியாரது கதாப்பிரசங்கத்தைக் கேட்டுருகாதார் யாழ்ப்பாணத்திலில்லை. பக்தி சொரூபமாகப் பரதேசியார் காட்சியளித்தார். அவர் உடுத்தும் உடை கஷாயமாகும். அவரது உருவமே எல்லோர் மனதையும் கசிந்துருகும்படி செய்துவிடும். அவரது கதாப்பிரசங்கத்தைக் கேட்பவர்களுக்கு உண்மையாகவே உடல் சிலிர்க்கும், உள்ளமெல்லாம் உருகும், கண்களிலிருந்து கண்ணீர் அருவியாகப் பாயும். கதாப்பிரசங்கம் மூலம் யாழ்ப்பாணத்தில் பக்திப் பிரவாகத்தை இவர் நிலைக்கச் செய்தவர்.

சிவதருமோத்தரம், ஒழிவிலொடுக்கம், சித்தாந்த சாஸ்திரங்களைப் படித்து அவ்வழி ஒழுகி, செயலிலும் சொல்லிலும் ஒரே தன்மையாய் வாழ்ந்தவர் பரதேசியார். சங்கரசுப்பையயர் காலத்திலிருந்தவர். இவர்களைப் போன்ற மனிதரை நாமிப்போது காண முடியாது.

நாகலிங்கப் பரதேசியார் இளம் வயதிலேயே இறைவனருள் கூட்ட இந்தியா சென்று அங்கு பண்முறைகளை முறையாகப் பயின்றவர். இல்லறத்தை வெறுத்து, துறவறத்தை மேற்கொண்டவர். யாழ்ப்பாணத்தில் சங்கானை என்னும் ஊரில் அவதரித்த இவர் அவ்வூரில் சிறு ஆச்சிரமமொன்றைச் சமைத்து வாழ்ந்துவந்தார். இவருக்கு அனேக மாணுக்கரிருந்தனர்.

நாகலிங்கப் பரதேசியார், யோகசுவாமிகளிடம் பற்றுள்ளவர். ஒருசமயம் பரதேசியார் தம்வாழ்க்கை ஜீவியத்திற்கே கஷ்டப்பட்டுக்கொண்டிருக்.கையில், நண்பர்கள் பலர், பரதேசியாரை ஒருக்கால் யோக சுவாமிகளிடம் அழைத்துக் கொண்டு போயிருந்தனர். பரதேசியார் தேவாரம்பாடுவதைக் கேட்கவேண்டும் என்ற ஆசை சுவாமிகளுக்கிருந்தது. பரதேசியார் தேவாரத்தைப் பாடினுர். பாடப்பாட யோகருக்கிருந்த ஆனந்தபக்திப் பிரவாகத்திற்கெல்லையில்லை. சதா தினமும் யோகர் சந்நிதியில் தேவாரம் பாடுவோரும் பரதேசியாரது தேவாரப் பண்ணை அன்று கேட்டுக் கொண்டிருந்தனர். யோகர் அவர்களைப் பார்த்து, 'நீங்களும் தினமும் பாடுகிறீர்கள்! பரதேசியாரும் இன்று பாடுகிருர்! பண்ணைப் பண்ணோடு பாடுகிருர். பாடுகின்ற முறைப்படி பாடினுல், ஏன் இறைவன் 'காசுநல்க மாட்டார்?' 'வாசிதீரவே காசு நல்குவான், 'பொய்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள், இம்மையே தரும் சோறும் கூறையும்'' என்ருர் யோகர். உடனே ஓரடியார் யோகர்சுவாமிகள் முன் நேர்த்திக்கடனுகை ஒரு பைநிறைய காசுகளைக் கொண்டுவந்து கொட்டினுர். பரதேசியார் கஷ்டப்படுகிருரா? ஏன் அவருக்குக் கஷ்டம்? பண்பாட இறைவனே அவருக்குக் இந்தக்காசுகளைக் கொண்டுவந்து கொடுக்கிருர்' எனச்சொல்லி அக்காசுகளைப் பரதேசியாருக்கே கொடுத்தார். இப்படியோர் சந்தர்ப்பம் நாகலிங்கப் பரதேசியார் வாழ்வில் நடந்தேறியது. நாகலிங்கப் பரதேசியார் நினைவுதினம் நேற்றுக்கொண்டாடப்பட்டது.

யன் கல்லூரியின் அருளும் மருளும் என்ற நாடகமும் இரண்டாம் பரிசு பெற்ற காங்கேசன்துறை இளந்தமிழர் மன்றத்தினரின் 'சிதம்பர தரிசனம்' என்ற நாடகமும் நாளை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. சைவப் புலவர் சங்க ஆதரவில் சைவப்புலவர்மாநாடும் பட்டமளிப்பு விழாவும் நாளை இம் மண்டபத்தில் நடைபெறுகிறது.

ஏற்படும் வருத்தங்கள் பெரும்பாலும் இப்படியான உஷ்ணக் கொதிப்பாலேயே உண்டாகின்றன. இந்தநாட்களில் கோழிகளை மிகவும் ஜாக்கிரதையாக வளர்க்க வேண்டும். குளிர்ந்த சோலைகளில் அவை நடமாடவேண்டும். போதிய சுத்தமான தண்ணீர் இருக்க வேண்டும். கூடுகளில் வளர்க்கப்படும் கோழிகளுக்கும் இப்படியே குளிர்மை கொடுக்காவிட்டால் கோழி நோய்கள்பரவும் அறிந்ததே. கோடைமழையும் இல்லாவிட்டால் இங்குள்ளவர்கள் பாடு மிகவும் திண்டாட்டமாய்த் தான் போய்விடும்.

எம்மைவிடக் கஷ்டப்படுகிறவர்களும் இருக்கிருர்கள் என்ற நினைவில் மனத்தை ஆறுதல்படுத்தவேண்டியதே ஒழிய வேறென்றும் செய்வதற்கில்லை.

— வழிப்போக்கன்

## சைவப்புலவர் மகாநாடும் பரிசளிப்பு விழாவும்

### நாளையும் மறுதினமும்

பம்பலப்பிட்டி, திங்கள்

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தினரின் ஆதரவில் நடைபெறும் சைவப் புலவர் மகாநாடும் பட்டமளிப்பு விழாவும் நாளை மாலை 5 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் ஆரம்பமாகி தொடர்ந்து மறுநாள் மாலை 9-ம் திகதியும் நடைபெறவிருக்கிறது.

முதல்நாள் நூல் வெளியீடும் கருததரங்கம் நிகழ்ச்சியில் கொழும்பு பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு. ஆ. வி. மயில்வாகனம் தலைமையில் நடைபெறும். உபசபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரம் விழாவை ஆரம்பித்துவைப்பார்.

'திருவுந்தியார்' என்ற நூலும், சைவம் (கவிதை) நூலும் அன்றைய தினம் வெளியிடப்படவிருக்கிறது. தமிழ்நாடு உயர்நிலைக் கல்விப் பிரதிப் பணிப்பாளர் திரு. பெ. திருஞானசம்பந்தன் 'சைவாகமங்களில் முப்பொருள்' என்னும் பொருள்பற்றி உரை நிகழ்த்துவார். இசை' சைவ நாடக நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

2-ம் நிகழ்ச்சி காலை 10 மணிக்கு சைவப்புலவர் வித்துவான் திரு இ. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும். சைவப்புலவர் அறிமுகம், கலந்துரையாடலை வித்துவான் ச. சச்சிதானந்தம் ஆரம்பித்துவைப்பார். இந்நிகழ்ச்சியில் சென்னை சைவ சித்தாந்த சமாஜச் சைவப்புலவர்கள் பங்கு பற்றுகிருர்கள்.

மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும் பட்டமளிப்பு விழா சங்கத்தலைவர் வித்துவான் வ. செல்லையா தலைமையில் நடைபெறும். செனட்டர் நீதிராசா பிரதம விருந்தினராகக்கலந்துகொள்ளும் இவ் விழாவில் புலவர் கருணலய பாண்டியனுருக்கு 'சித்தாந்த வித்தகர்' என்ற கௌரவப்பட்டம் வழங்கப்படும் இதை சைவப் புலவர்மணி திரு. த குமாரசாமிப்பிள்ளை வழங்குவார்.

பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, திரு. வ. திருஞானசம்பந்தன் ஆகியோரின் பேச்சும் இடம் பெறும்.

......

## இலங்கையுடன் 20 ஜெர்மன் நிறுவனங்கள்

கோட்டை, ஞாயிறு

20 ஜெர்மன் வர்த்தக நிறுவனங்கள் இலங்கையோடு வியாபாரத் தொடர்புகொள்ள விரும்பியுள்ளன. மோட்டார் வாகனங்கள் மோட்டர் உதிரிப் பாகங்கள், நெசவு யந்திரங்கள், தளபாடப்பிணைப்புக்கள், மரவேலை, விவசாய வேலைகளுக்கான கருவிகள் போன்றவையும் ஜெர்மனி இலங்கை இறக்குமதியாளருக்குக் கொடுக்க முன்வந்த பொருட்களில் இடம்பெறுகின்றன.

## விவசாய மன்னர்கள் தேர்தலில் நிறுத்தப்பவர்

### ஐ. தே. கட்சி யோசனை

கொழும்பு, ஞாயிறு

ஐக்கியதேசியக்கட்சியினர் இம்முறை விவசாய மன்னர்களை பொதுத் தேர்தலில் நிறுத்துவதற்கு ஆலோசித்து வருகின்றனர். தேசிய அரசாங்கத்துடன் ஒத்துழைத்து, நாட்டில் உப உணவு உற்பத்தியை அதிகரிக்க உதவிய விலசாய மன்னர்களை அரசியலில் ஈடுபடுத்த ஐக்கிய தேசியக்கட்சி விரும்புகிறது.

தென் மாகாணத்தில் சில குறிப்பிட்ட தொகுதிகளில் இவர்களை நிறுத்துவதுபற்றி விரைவில் முடிவுஎடுக்கப்படவிருக்கிறது. ஒரு சில விவசாயிகள் இதுபற்றி ஐக்கிய தேசியக்கட்சியினருடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் தெரிகிறது.

# 1000 பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம்

### 250 பேர் ஓய்வுபெறுவதால் ஏற்படும் காலி இடம்

கொழும்பு, திங்கள்

1000 பட்டதாரிகளுக்கு இவ்வருட முடிவிற்குள் வேலை வழங்கப்படும். தற்பொழுது இலங்கையில் 10,000 வேலையற்ற பட்டதாரிகள் இருக்கின்ருர்கள்.

இவ்வருடம் 250 பட்டதாரி ஆசிரியர்கள் ஓய்வு பெற இருக்கின்றனர். இந்த 250 காலி இடங்களும் புதிய பட்டதாரிகளைக் கொண்டு நிரப்புவதற்கு கல்விஇலாகா ஒழுங்குகள் செய்துவருகிறது.

முதலாந்தரம் இரண்டாந்தரம் மூன்ருந்தரம் அதிபர்களுக்கு பதவிஉயர்வு வழங்கும்போது ஏற்படும் காலி இடங்களிலும் இவர்கள் நியமிக்கப்படுவர். ஓய்வு பெறுபவர்களினதும் பதவிஉயர்வு பெறுபவர்களினதும் தொகை சுமார் ஆயிரமாக இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

— --

## சந்தைக்கு காணிகள்

கோட்டை, ஞாயிறு.

உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கு சந்தை வசதி செய்து கொடுக்க 500 உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிலம் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அநேக கிராமங்களில்சந்தைகள் தனியார் வளவுகளுக்குள் இருப்பதுனல் கிராம சபைகளினுல் வரி வசூலிக்க முடியாமல் இருப்பதினுலேயே இவ்வித நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

ஆலயப்பிரவேசத்திற்கு

# 'சகல முக்போக்கு இயக்கமும் ஒற்றுமைப்பட வேண்டும்"

## புரட்சிகர முன்னணித் தலைவர்கருத்து

யாழ்ப்பாணம், திங்.

ஒரே தினத்தில் பல இடங்களில் ஆலயப்பிரவேச முயற்சி செய்வதனுல் பயனில்லை ஒரே இடத்தில் பல்வேறு முற்போக்கு இயக்கத்தினரும் ஒன்று சேர்ந்து செயல் பட்டால்தான் வெற்றிகாண முடியும்.

புரட்சிகர சமசமாஜ கட்சியின் ஆதிக்கத்திலுள்ள புரட்சிகர விடுதலைமுன்னணித் தலைவர் திரு. எம். பொன்னையா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. பொன்னையாமேலும் கூறியதாவது:

மட்டுவில் அம்மன்கோயில் தாங்களே ஆலயப் பிரவேச முயற்சி செய்யப்போவதாகவும்வேறு எவரும் கலந்து கொள்ளக் கூடாதென்றும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினர் தெரிவித்தனர். இதனுல் நாங்கள் கலந்துகொள்ளாமல் பார்வையாளராக மட்டும் சென்ருேம்.

முதல் கிழமை கோயில் மட்டும் தான் மூடப்பட்டிருந்தது. இவர்களின் ஆலயப் பிரவேச முயற்சிகளினுல் இரண்டாம் கிழமை மடத்திற்கு கம்பி வேலி போடப்பட்டது. மூன்ருவது கிழமை அசம்பாவித சம்பவங்கள் நடைபெற்றன. நாலாவது கிழமை கோயில் மூன்று வாசல்களும் முள்வேலி போட்டுமூடப்பட்டுவிட்டது ஆதலால்தனியாக போராடி வெற்றிகாணமுடியாது. சிறுபான்மை சமூகத்தவர், ஆலயப்பிரவேச இயக்கத்தில் கட்சி வேறுபாடுகளை மறந்து ஒன்ருக இறங்கினுல் வெற்றி கிடைப்பது நிச்சயம்.

இம்மாதம் 12-ம் தேதி சுன்ணுகம் கதிரமலைச் சிவன் கோவிலில் திருவிழா நடைபெறும்போது முற்போக்கு சக்திகளையெல்லாம் ஒன்று திரட்டி ஆலயப் பிரவேசம் செய்ய முடிவுசெய்துள்ளோம்.

ஆலயப்பிரவேசம்பற்றி முன்றறிவித்தல் கொடுப்பதால் சில கோவில் மனேஜர்கள் எதிர் நடவடிக்கை எடுத்துவருகின்றனர். ஆதலால் சில கோவில்களில்திருவிழா நடைபெறும் போது முன்னறிவித்தலின்றி திடீர் பிரவேசம் செய்வது பற்றி ஆலோசித்துவருகிறேம்.

மட்டுவில் அம்மன் கோவிலுக்கு எங்கள் கோஷ்டியைச் சேர்ந்த சிலரும் நாளை பார்வையாளராகச் செல்வார்கள்.

......

## மலேரியா தடுப்பு ஊழியர்கள் தீயணைததனர்

உடுப்பிட்டி, ஞாயிறு

தீப்பிடித்து எரிந்துகொண்டிருந்த வீட்டை மலேரியா தடுப்பு இயக்க ஊழியர்கள் அணைத்தனர். ஊர்காவற்றுறை பருத்தியடைப்புஎன்னுமிடததில் இத்தீவிபத்து நிகழ்ந்தது.

எஸ்.சிவசம்பு என்பவருக்குச் சொந்தமானவீடே தீப்பற்றி எரிந்தது. இவ்வீட்டில் தீ பரவுவதைக் கண்ட மலேரியா தடுப்பு இயக்க உத்தியோகத்தர் திரு. ஆ. கயிலாயநாதன் தமது உதவியாளர்கள் நால்வரின் உதவியுடன் தண்ணீர் எடுப்பது மிகவும் கஷ்டமாக இருந்த போதிலும் ஈரச்சாக்குப் போட்டு வெகுசிரமத்துடன் தீயை அணைத்தார். தீவிபத்து நடந்த சமயம் பிரஸ்தாப வீட்டில் இருபெண்கள் மட்டுமே இருந்தனர். எரிந்துகொண்டிருந்த வீட்டினுள் இருந் சுமார் 800 ரூபா பெறுமதியான பொருட்களையும் அவர்களே மீட்டுக்கொடுத்தனர்.

## தூதரின் பூதவுடல்

கொழும்பு ஞாயிறு

இத்தாலியில் காலமான மேஜர் ஜெனரல் எச். டபிள்யு. ஜி. விஜயக்கூனின் பூதவுடல் கொழும்புக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இத்தாலியில் இலங்கைத் தூதராகவிருந்த மேஜர் ஜெனரல் விஜயக்கூன் அங்கு கார் விபத்தொன்றில் காலமானுர். கட்டுநாயக்கா விமானநிலையத்தில் அவருடைய பூதவுடல் வந்து சேர்ந்தபொழுது பூரண ராணுவமரியாதை கொடுக்கப்பட்டது. பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்கா, நீதி அமைச்சர் திரு. ஏ. எப். விஜயமன்ன, வர்த்தக அமைச்சர் திரு. நியுபொர்ணுண்டோ, ராணுவத்தளபதி பிரிகேடியர் ஜெயவீர ஆகியவர்களும் விமானநிலையத்துக்கு வந்திருந்தனர்.

## சிரமதானம்

சுழிபுரம், ஞாயிறு.

சித்தங்கேணி மகா கணபதிப்பிள்ளையார் கோயில் பூந்தோட்ட வளவு சிரமதான மூலம் சுத்தம் செய்யப்பட்டது. சுமார் இருபது வாலிபர்கள் கலந்து கொண்ட இச் சிரமதான வேலைக்கு செல்வன் ச. ஜெயக்குமார் தலைமை வகித்தார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org